www.penakural.com
மலர்: 02 இதழ்: 10 ஆகஸ்ட் 2024 விலை: ₹ 20/-
RNI No.:
TNTAM / 2022 / 85375

# பேனா குரல்

PENA KURAL

தமிழ் மாத இதழ்

Scan and visit the website



## 78-வது சுதந்திர தின உரையாற்றிய பிரதமர் மோடி!

இந்தியாவின் வருங்காலத்திற்கான லட்சியத்துடன் கூடிய இலக்கை நிர்ணயித்துள்ளார்!




## காவல்துறையினருக்கு புதிய அறிவிப்பை வெளியிட்டார் முதலமைச்சர் ஸ்டாலின்!

# சான்றோர் சுடர் மாத இதழின் மூன்றாம் ஆண்டு விழா











சான்றோ சுடர் மாத இதழின் மூன்றாம் ஆண்டு விழா சென்னை பத்திரிகை யாளர்கள் மன்றத்தில் 27-07-2024 அன்று மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டது.

இதில் சிறப்பு விருந்தினர்களாக சிங்கப்பூர் நாட்டின் முதன்மை மாவட்ட நீதிபதி பாலா ரெட்டி, கவிஞர், பாடலாசிரியர், திரைப்பட நடிகர் சிநேகன், சான்றோர் சுடர் மாத இதழின் ஆசிரியர் கே.வி.எஸ். தமிழ்வாணன், இணை ஆசிரியர் எஸ்.பாலகுமாரன், கிளாசிக் கிச்சன்ஸ் - உரிமையாளர் சுரேஷ் பாபு, பகுஜன் குரல் மாத இதழ் ஆசிரியர் ஜெகதீசன், வாய்மை குரல் ஆசிரியர் ரஜினி பாலா, கடல் துளிகள் ஆசிரியர் யுவராஜ், பேனா குரல் ஆசிரியர் சிவசங்கர், நீதியின் பாதை ஆசிரியர் ரஞ்சன் உள்ளிட்ட பல பத்திரிகை ஆசிரியர்கள், நிருபர்கள் மற்றும் ஊடக துறையை சேர்ந்த நண்பர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் பாடலாசிரியர் சினேகன் சான்றோர் சுடர் மாத இதழின் நிர்வாக ஆசிரியர் ஜெயேந்திரன் உடனான தன்னுடைய நட்பு குறித்து விவரித்து பேசினார்.

பத்திரிகையாளர்களின் நிலை குறித்தும் மிகவும் அழகாக எட்டு நிமிடங்கள் பேசி, அவர்கள் சந்தித்து வரும் இன்னல் களை எடுத்துரைத்தார். டிஜிட்டல் உலகத்தில் அச்சு ஊடகம் நடத்துவது மிகவும் எளிதான காரியம் அல்ல என்று கவிதை நடையில் எடுத்துரைத்தார்.



மேலும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து ஊடக துறையை சார்ந்தவர்களுக்கும் கவிஞர் சினேகன் நினைவுப் பரிசை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

- பா.கார்த்திகேயன்

# பேனா குரல்

**PENA KURAL**

தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2022/85375

ஆண்டு: 02 இதழ்: 10 ஆகஸ்ட் 2024

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர்:
**நா வீ சிவசங்கர்**

ஆசிரியர் : **ராதிகா.S**, B.E.,

கௌரவ ஆசிரியர் : **K.ராமசுப்ரமணியன்**

இணை ஆசிரியர் : **K.ரமேஷ்குமார்**

துணை ஆசிரியர்கள்:
**துரை. சந்துரு, ந.மதிவாணன், K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின், P.கார்த்திகேயன், B.நாராயணசாமி**

தலைமை நிருபர்கள்:
**B.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், M.திலிப் குமார், சரவணன் @ மணிகண்டன், K.மாரிதுரை, A.தங்கராஜ்**

நிருபர்கள்:
**Ba.சரவணன், K.கலைமணி, D.பாமா, அன்புமணி, S.பிரகாசம், இளைய தர்ஷினி, P.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன், K.சுபுலட்சுமி, S.ஜெயராஜ்**

புகைப்பட நிருபர்கள்:
**V.கவியரசன், K.மிதுன் சாய்**

சட்ட ஆலோசகர்கள்:
**M. குணசீலன்**, B.Com.,M.L.,
**G. சத்தியநாராயணன்**, B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:
*Tamilni Printz & Graphics* - 8754582123

நிர்வாக அலுவலகம்:
**பேனா குரல்**
**3/885, பிள்ளையார் கோவில் தெரு,**
**மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,**
**தமிழ் நாடு, இந்தியா - 600097.**

தொடர்புக்கு:
¡ 044-35906002, t 9962245338
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com

பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் வாசகங்கள் இதழின் சொந்த கருத்து அல்ல. பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டது. *


ஆசிரியர் குரல்

# சுங்கச்சாவடி கட்டண உயர்வை திரும்பப் பெறவேண்டும்!

சுங்கச்சாவடிகளின் ஆண்டு வருமானம் குறித்த தகவலை, எட்டு ஆண்டுகளாக தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வெளியிடாமல் மறைத்து வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தமிழகத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளை பயன்படுத்தும் வாகனங்களிடம் கட்டணம் வசூலிக்க, 67 இடங்களில் சுங்கச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு சுங்கச்சாவடிகளிலும் ஆண்டுதோறும் வசூலாகும் கட்டண விபரத்தை, தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வெளியிட வேண்டும். இதற்கென, சுங்கச்சாவடிகளுக்கு தனியாக இணையதளத்தை மத்திய சாலை போக்குவரத்து அமைச்சகம் உருவாக்கியுள்ளது.

ஆனால், தமிழக சுங்கச்சாவடிகளில், 2016ம் ஆண்டு வரை வசூலான கட்டணம் குறித்த விபரங்கள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன.

சாலை அமைத்ததற்கான கட்டணத்தை வசூல் செய்தபின், சுங்கக் கட்டணத்தை 20 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்பது விதிமுறைகளில் உள்ளது.

சாலை விரிவாக்கம் என்ற பெயரில் கட்டண வசூல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இது, வாகன உரிமையாளர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து, தமிழக மணல் லாரி உரிமையாளர் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் எஸ்.யுவராஜ் கூறியதாவது:

நாடு முழுதும் உள்ள சுங்கச்சாவடிகளில், 2023 - 24ம் ஆண்டு, 55,844 கோடி ரூபாய் கட்டணம் வசூல் செய்யப்பட்டு உள்ளது. இதில், தமிழகத்தில் மட்டும் 4,221 கோடி ரூபாய் வரை வசூலாகி உள்ளது. அதற்கு முந்தைய ஆண்டு, 3,817 கோடி ரூபாய்தான் வசூலாகி இருந்தது.

சுங்கச்சாவடிகள் எண்ணிக்கை மற்றும் கட்டண உயர்வால், ஒரே ஆண்டில், 404 கோடி ரூபாய் வருவாய் அதிகரித்துள்ளது. லோக்சபாவில் தி.மு.க., - எம்.பி., கனிமொழி எழுப்பிய கேள்விக்கு, இந்த பதிலை மத்திய அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு சுங்கச்சாவடியிலும் எவ்வளவு கட்டணம் வசூல் செய்யப்பட்டது என தெரிவிப்பதில்லை. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்டாலும், உரிய பதில் வருவதில்லை.

மாநில அரசு தான் இப்பிரச்னையில் தலையிட்டு, தமிழகத்தில் வசூலாகும் சுங்கக் கட்டணம் குறித்த விபரத்தை பெற்று, சுங்கச்சாவடிகள் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

– ஆசிரியர்

# காவல்துறையினருக்கு புதிய அறிவிப்பை வெளியிட்டார் முதலமைச்சர் ஸ்டாலின்




சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற இந்திய குடியரசுத் தலைவர் பதக்கங்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் பதக்கங்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழா நடைடபெற்றது. விழாவில், , தமிழ்நாடு காவல் துறையினரின் அணிவகுப்பினை முதலமைச்சர் ஸ்டாலின் ஏற்றார். பின்னர் விழாவில் விருது பெற்ற காவலர்களுக்கு பதக்கங்களை வழங்கி கவுரவித்தார்.

பின்னர் நிகழ்ச்சியில் உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் , முதல்வர் என்ற முறையில் தினமும் பல்வேறு துறைகள் சார்பில் நடக்கும் நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொள்கிறேன். இன்று காவல்துறை சார்பாக நடக்கும் விழாவில் பங்கெடுக்கிறேன் என்று சொன்னால் என்னுடைய துறையின் சார்பில் நடைபெறும் நிகழ்ச்சி என்பதால், கூடுதல் மகிழ்ச்சியை நான் அடைகிறேன். Advertisement எல்லாத் துறைகளும் என்னுடைய துறைகள்தான். இருந்தாலும், காவல்துறையினர் என்னை அதிகம் உரிமை கொண்டாடிக் கொள்ள முடியும் என்பதுதான் உண்மை. என் துறையைச் சேர்ந்த காவலர்கள் பல்வேறு பதக்கங்களை பெற்றிருப்பதை பார்க்கும்போது நான் பதக்கம் வாங்கியதுபோல எனக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. இந்திய குடியரசுத் தலைவர் பதக்கங்கள் - ஒன்றிய உள்துறை அமைச்சர் பதக்கங்கள் - தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் - ஆகியவற்றை பெற்றுள்ள காவலர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறை - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை -சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை - ஊர்க்காவல் மற்றும் குடிமை பாதுகாப்புப் படை தடய அறிவியல் - ஆகிய துறைகளில் பணியாற்றும் காவலர்களுக்கு இந்தப் பதக்கங்கள் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தப் பதக்கங்களுக்குப் பின்னால் இருக்கும் உங்கள் உழைப்பும், திறமையும் தலைவணங்கத்தக்க அம்சமாகும்! தமிழ்நாடு பெருமைமிகு மாநிலமாக திகழ்கிறது என்றால், அந்தப்

பெருமையில் தமிழ்நாடு காவல்துறைக்குப் பெரும் பங்கு இருக்கிறது. அமைதியான மாநிலத்தில்தான் வளமும் வளர்ச்சியும் இருக்கும். தமிழ்நாட்டில் சட்டம் – ஒழுங்கு நிலை மிகவும் சிறப்பாக இருப்பதால்தான், தொழில் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, உள்கட்டமைப்பு மேம்பாடு, மனித வளர்ச்சிக் குறியீடுகள் என்று எதை எடுத்துக் கொண்டாலும் தமிழ்நாடு இந்தியாவில் முன்னணி மாநிலமாக திகழ்கிறது.

இத்தகைய பெருமையை அரசுக்கு உருவாக்கித் தரும் காவலர்கள் எல்லோருமே பதக்கங்களுக்கு தகுதி படைத்தவர்கள்தான்! மக்களைப் பாதுகாக்கும் காவலர்களை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை! அந்த அடிப்படையில்தான், இந்த ஆணையத்தை அமைத்து காவலர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுத்து வருகிறோம். காவல்துறையை மேலும் நவீனமயமாக்கி வருகிறோம். கடந்த மூன்றாண்டு காலத்தில் காவல் துறையின் உட்கட்டமைப்பை வலுப்படுத்தவும், காவல் துறையை நவீனமயமாக்கவும், காவலர் நலனைப் பாதுகாக்கவும் பல்வேறு சாதனைகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

காவல்துறையில் முதன்முதலாக மகளிரை இடம்பெறச் செய்தது தலைவர் கருணாநிதிதான். இன்று எனக்கு அளிக்கப்பட்ட அணிவகுப்பு மரியாதை கமாண்டாராக ஒரு பெண் அதிகாரி இருந்து அந்த காட்சியை நீங்கள் பார்த்தீர்கள். அது எனக்கு மிகவும் இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருக்கிறது. மகளிர் பொன்விழா ஆண்டான இப்போது, மகளிர் காவலர்களிடையே நீண்ட நாட்களாக இருக்கும் ஒரு கோரிக்கையை மிகுந்த மகிழ்ச்சியோடும் மனைநிறைவோடும், இந்த நிகழ்ச்சியில் அறி-விப்பாக நான் வெளியிட விரும்புகிறேன். தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரியும் பெண் காவலர்களுக்கு ஒரு ஆண்டு மகப்பேறு விடுமுறை அளிக்கப்படுகிறது. இந்த விடுமுறை முடிந்து, அவர்கள் பணிக்கு திரும்பும்போது அவர்கள் குழந்தைகளை பராமரிப்பதில் பல சிரமங்கள் ஏற்படுவது தொடர்பாக தொடர்ந்து அவர்கள் கோரிக்கை வைத்து வருகிறார்கள்.

அவர்கள் கோரிக்கையை ஏற்று, மகப்பேறு விடுமுறையில் இருந்து பணிக்குத் திரும்பும் பெண் காவலர்களுக்கு, அவர்கள் பணிமூப்புக்கு விலக்களித்து, அவர்களுடைய பெற்றோர்களோ அல்லது கணவர் வீட்டைச் சார்ந்தவர்களோ வசிக்கும் மாவட்டங்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பணிமாறுதல் வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகளை பாதிக்கும் குற்றச்செயல் பிரச்னைகளை தீர்ப்பதில் நம்முடைய பெண்காவலர்கள் மிக முக்கிய பங்காற்றுகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட குற்றங்களை கையாளுவதில் பெண் காவலர்களின் தொழில்முறைத் திறன்களை மேலும் மேம்படுத்தும் வகையில், பெண் கடத்தல் குற்றங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றங்களை விசாரித்து தீர்ப்பதற்கு அவர்களுக்கு சிறப்புத் திறன் பயிற்சி அளிக்கப்படும். உங்களுக்கு இருக்கும் கடமையும், பொறுப்பும் மிக மிகப் பெரியது. மக்களைக் காப்பாற்றுவது உங்கள் கடமை! மக்களை பாதுகாப்பது உங்கள் பொறுப்பு! அதை எந்தக் குறையும் இல்லாமல் நீங்கள் நிறைவேற்றி தாருங்கள் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

குற்றங்களை குறைக்கும் துறையாக மட்டும் இல்லாமல், குற்றங்கள் நடப்பதற்கு முன்பே தடுக்கும் துறையாக செயல்பட வேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். குற்றங்கள் நடக்காத மாநிலமாக – போதைப் பொருள் நடமாட்டம் இல்லாத மாநிலமாக – பாலியல் குற்றம் இல்லாத மாநிலமாக – நம்முடைய மாநிலம் உருவாக வேண்டும். குற்றங்கள் எங்கேயும் யாராலும் நடக்கக் கூடாது. மீறி நடந்தால், உடனடியாக குற்றவாளி கைது செய்யப்பட்டாக வேண்டும். சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு விரைவாக தண்டனையை பெற்றுத் தந்தாக வேண்டும்.

இந்த உறுதிமொழியை நான் மட்டும் எடுத்தால் போதாது – காவல்துறையின் உயரதிகாரிகள் மட்டும் எடுத்தால் போதாது – ஒவ்வொரு காவலரும் எடுத்தாக வேண்டும். “என்னுடைய காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் எந்த வகைப்பட்ட குற்றமும் நடக்கவில்லை – நடக்க விடமாட்டேன்” என்று ஒரு காவலர் முடிவெடுத்துவிட்டால் குற்றங்கள் பூஜ்ஜியத்திற்கு வந்துவிடும். மனித வளர்ச்சியின் அனைத்துக் குறியீடுகளிலும் முன்னணி மாநிலமாக இருக்கும் தமிழ்நாடு – குற்றச் சம்பவங்களில் பூஜ்-ஜியமாக இருந்தால்தான், நமக்கெல்லாம் பெருமை. இதில் பூஜ்ஜியம் வாங்க – 100 விழுக்காடு அர்ப்பணிப்புடன், அனைத்துக் காவலர்களும் பணியாற்ற வேண்டும் என்று கேட்டு, விருது பெற்ற அனைவரையும் பாராட்டி, மகிழ்ந்து வணக்கம் சொல்லி, விடைபெறுகிறேன்.

– ராதிகா.S

# தமிழ்நாட்டில் மேலும் இரண்டு நீர்நிலைகள் ராம்சார் தளங்களாக அறிவிப்பு


மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ், 2024 சுதந்திர தினத்தை முன்னிட்டு, மேலும் மூன்று ஈரநிலங்களை ராம்சர் தளங்களாக அறி-விப்பதன் மூலம், இந்தியா தனது ராம்சர் தளங்களின் (சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்கள் எண்ணிக்கையை தற்போதுள்ள 82-லிருந்து 85 ஆக உயர்த்தியுள்ளது என்று கூறினார். சுதந்திர தினத்தை முன்னிட்டு மூன்று ராம்சார் தளங்கள் சேர்க்கப்பட்டதற்கு திரு யாதவ் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இயற்கையுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், நமது ஈரநிலங்களை அமிர்த தாரோஹர்கள் என்று அழைப்பதற்கும், அவற்றின் பாதுகாப்பிற்காக அயராது உழைப்பதற்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியதை இந்த சாதனை பிரதிபலிக்கிறது என்று திரு யாதவ் கூறினார். ராம்சார் தளங்களில் ஈரநிலங்கள் சேர்க்கப்பட்டுள்ள தமிழ்நாடு மற்றும் மத்தியப் பிரதேச மாநிலங்களுக்கு மத்திய அமைச்சர் வாழ்த்து தெரிவித்தார். வளர்ச்சியடைந்த இந்தியா ஒரு பசுமை இந்தியா என்று உறுதிமொழி எடுக்க வேண்டும் என்றும் யாதவ் கூறினார்.

இத்துடன் சேர்த்து, நாட்டில் ராம்சார் தளங்களின் பரப்பளவு 1358067.757 ஹெக்டேரைத் தொட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள நஞ்சராயன் பறவைகள் சரணாலயம் மற்றும் கழுவேலி பறவைகள் சரணாலயம் மற்றும் மத்தியப் பிரதேசத்தில் உள்ள தவா நீர்த்தேக்கம் ஆகிய மூன்று புதிய தளங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. நாட்டில் ஈரநிலங்கள் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கு சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் குறிப்பிடத்தக்க கொள்கை உந்துதலுக்கு, இந்த புதிய தளங்கள் ஒரு சான்றாகும். 1971-ல் ஈரானின் ராம்சாரில் கையெழுத்திடப்பட்ட ராம்சார் உடன்படிக்கையின் ஒப்பந்ததாரர்களில் இந்தியாவும் ஒன்றாகும். பிப்ரவரி 1,1982 அன்று இந்தியா இந்த மாநாட்டில் கையெழுத்திட்டது.

1982 முதல் 2013 வரை ராம்சார் தளங்களின் பட்டியலில் மொத்தம் 26 தளங்கள் சேர்க்கப்பட்டிருந்தன, ஆனால், 2014 முதல் 2024 வரை, நாடு 59 புதிய ஈரநிலங்களை ராம்சார்

## நாட்டிலேயே தமிழகத்தில்தான் அதிக ராம்சார் தளங்கள் உள்ளன



தளங்களின் பட்டியலில் சேர்த்துள்ளது. தற்போது, தமிழ்நாட்டில் அதிகபட்சமாக ராம்சார் தளங்கள் (18 தளங்கள்) உள்ளன, அதைத் தொடர்ந்து உத்தரப்பிரதேசத்தில் (10 தளங்கள்) உள்ளன.

நஞ்சராயன் பறவைகள் சரணாலயம் என்பது தமிழ்நாட்டின் திருப்பூர் மாவட்டத்தின் ஊத்குளி வட்டத்தின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள ஒரு பெரிய ஆழமற்ற ஈரநிலமாகும். இப்பகுதியில் உள்ள ஈரநிலங்கள் முக்கியமாக வானிலை நிலைமைகளைப் பொறுத்தது, குறிப்பாக நல்லார் வடிகாலில் இருந்து வரும் கனமழை நீரைப் பொறுத்தது. நஞ்சராயன் ஏரி திருப்பூர் மாவட்டத்தில் உள்ள சர்க்கார் பெரியபாளையம் கிராமத்திற்கு அருகே, திருப்பூர் நகரத்திற்கு வடக்கே 10 கி. மீ. தொலைவில் திருப்பூர்-ஊத்துக்குளி பிரதான சாலையில் அமைந்துள்ளது.

இந்த ஏரி, இரண்டு கிராமங்களின் (சர்க்கார் பெரியபாளையம் மற்றும் நேருபெரிச்சல்) கீழ் வருகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இப்பகுதியை ஆட்சி செய்த மன்னர் நஞ்சராயனால் பழுதுபார்க்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டதன் காரணமாக இந்த ஏரிக்கு அதன் பெயர் கிடைத்தது.

மேலும், சுமார் 191 வகையான பறவைகள், 87 வகையான பட்டாம்பூச்சிகள், 7 வகையான நீர்நிலவாழ் உயிரினங்கள், 21 வகையான ஊர்வன, 11 வகையான சிறிய பாலூட்டிகள் மற்றும் 77 வகையான தாவரங்கள் ஏரியிலும் அதைச் சுற்றியும் பதிவு



செய்யப்பட்டுள்ளன. இந்த தளம், அங்கு வசிக்கும் பறவை இனங்களுக்கு உணவு மற்றும் கூடு கட்டும் வாழ்விடமாக செயல்படுகிறது, இடம்பெயரும் பறவைகள் இடம்பெயரும் பருவத்தில் இந்த ஏரியை தங்கள் தீவன இடமாகப் பயன்படுத்துகின்றன. இப்பகுதியின் விவசாய நோக்கங்களுக்கு இந்த ஏரி முக்கியமான நீர் ஆதாரமாகவும் செயல்படுகிறது.

நிலத்தடி நீர் செறிவூட்டலில் இந்த ஏரி, முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த ஏரி அதன் வளமான பறவை இனப் பன்முகத்தன்மை காரணமாக தமிழ்நாட்டின் 17 வது பறவைகள் சரணாலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏரி மற்றும் அதன் வாழ்விடங்களைப் பாதுகாப்பதில் உள்ளூர் சமூகம் ஏற்கனவே வலுவான சங்கத்தை உருவாக்கியுள்ளது. வனத்துறை உள்ளூர் சமூகத்துடன் இணைந்து நிலையான அடிப்படையில் ஏரியை நிர்வகிக்கிறது.

2021-ம் ஆண்டில் தமிழ்நாட்டின் 16 வது பறவைகள் சரணாலயமாக 5151.6 ஹெக்டேருக்கும் அதிக பரப்பளவில் அமைந்துள்ள கழுவேலி பறவைகள் சரணாலயம் அறிவிக்கப்பட்டது. இது பாண்டிச்சேரியின் வடக்கே விழுப்புரம் மாவட்டத்தில் கோரமண்டல் கடற்கரையில் அமைந்துள்ள ஒரு ஆழமற்ற உவர்நீர் ஏரியாகும்.

இந்த ஏரி வங்காள விரிகுடாவுடன் உப்புகழி சிற்றோடை மற்றும் எடையந்திட்டு முகத்துவாரம் மூலம் இணைக்கப்பட்டுள்ளது. கழுவேலி குறிப்பிடத்தக்க மற்றும் பல்லுயிர் வளம் நிறைந்த ஈரநிலங்களில் ஒன்றாகும். இந்த ஏரி தீபகற்ப இந்தியாவின் மிகப்பெரிய ஈரநிலங்களில் ஒன்றாகும். நீர் அம்சங்களின் அடிப்படையில் இந்த ஏரியை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம், அதாவது உவர்நீர் கொண்ட முகத்துவாரப் பகுதி, கடல் நீரைப் பயன்படுத்தும் உப்புகழி சிற்றோடை மற்றும் கழுவேலி வடிநிலத்தில் நன்னீர். கழுவேலி பறவைகள் சரணாலயம் மத்திய ஆசிய பறக்கும் பாதையில் அமைந்துள்ளது,

மேலும் இது இடம்பெயரும் பறவைகளின் இனங்களுக்கு ஒரு முக்கியமான நிறுத்த இடமாகவும், இங்கேயே வசிக்கும் பறவைகளின் இனப்பெருக்க இடமாகவும், மீன்களுக்கான இனப்பெருக்க இடமாகவும், நீர்த்தேக்கங்களுக்கான முக்கிய நீர் சேமிப்பு ஆதாரமாகவும் செயல்படுகிறது. உப்புநீரில் உள்ள பகுதிகளில் அவிசெனியா இனங்களைக் கொண்ட மிகவும் சீரழிந்த சதுப்புநிலப் பகுதிகள் காணப்படுகின்றன. முந்தைய ஆண்டுகளில், இப்பகுதி வெப்பமண்டல உலர் பசுமையான காடு களுக்கு புகலிடமாக இருந்ததாக கூறப்படுகிறது. இந்த பகுதியில், பல நூறு ஹெக்டேர் நிலப்பரப்பில் நாணல் (டைஃபாங்குஸ்டாட்டா) காணப்படுகிறது. கிரேட்டர் ஃபிளமிங்கோ, ஃப்ளாக் ஆஃப் பிளாக்-ஹெட் ஐபிஸ், வர்ணம் பூசப்பட்ட நாரை மந்தையுடன், குஞ்சுகளுடன் யூரேசிய கூட்

தவா மற்றும் டென்வா ஆறுகள் சங்கமிக்கும் இடத்தில் தவா நீர்த்தேக்கம் கட்டப்பட்டுள்ளது. மலானி, சோன்பத்ரா மற்றும் நாக்ட்வாரி ஆறுகள் தவா நீர்த்தேக்கத்தின் முக்கிய துணை ஆறுகளாகும். இடது கரையின் துணை நதியான தவா நதி சிந்த்வாரா மாவட்டத்தில் உள்ள மகாதேவ் மலைகளில் இருந்து உருவாகி, பேதுல் மாவட்டம் வழியாக பாய்ந்து நர்மதாபுரம் மாவட்டத்தில் நர்மதா நதியுடன் இணைகிறது. இது நர்மதா ஆற்றின் மிக நீளமான துணை நதியாகும் (172 கி.மீ). தவா நீர்த்தேக்கம் இட்டார்சி நகருக்கு அருகில் அமைந்துள்ளது. இந்த நீர்த்தேக்கம் முக்கியமாக, நீர்ப்பாசன தேவைகளுக்காக கட்டப்பட்டது.

இருப்பினும், பின்னர் இது மின் உற்பத்தி மற்றும் மீன்வளர்ப்புக்கும் பயன்படுத்தப்படுகிறது. தவா நீர்த்தேக்கத்தின் மொத்த நீரில் மூழ்கும் பரப்பளவு 20,050 ஹெக்டேர் ஆகும். இந்த நீர்த்தேக்கத்தின் மொத்த நீர்ப்பிடிப்புப் பகுதி 598,290 ஹெக்டேர் ஆகும். தவா நீர்த்தேக்கம் நர்மதாபுரம் மாவட்ட வனத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது. இந்த நீர்த்தேக்கம் சத்புரா புலிகள் காப்பகத்திற்குள் அமைந்துள்ளது சத்புரா தேசிய பூங்கா மற்றும் போரி வனவிலங்கு சரணாலயத்தின் மேற்கு எல்லையை உருவாக்குகிறது.

நீர்வாழ் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு குறிப்பாக பறவைகள் மற்றும் காட்டு விலங்குகளுக்கு, நீர்த்தேக்கம் முக்கியமானது. பல அரிய மற்றும் ஆபத்தான தாவர இனங்கள், ஊர்வன மற்றும் பூச்சிகள் இங்கு காணப்படுகின்றன. பல உள்ளூர் மற்றும் புலம் பெயர்ந்த பறவைகளுக்கு, இது ஒரு முக்கியமான வாழ்விடமாகும். இது மத்தியப் பிரதேச மாநிலத்தின் மிகப்பெரிய பாதுகாக்கப்பட்ட பகுதியாகும். இப்பகுதி சுற்றுச்சூழல், தொல்லியல், வரலாற்று மற்றும் வனவியல் கண்ணோட்டத்தில் பல தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளது. - R.ஹரிகிருஷ்ணன்

# வங்கதேசத்தில் ஷேக் ஹசீனா ஆட்சிக் கவிழ்ப்புக்கு என்ன காரணம்?

வங்கதேச நாட்டில் தற்போது கடும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. அந்நாட்டின் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா தனது பொறுப்பை ராஜினாமா செய்து விட்டு வெளிநாடு தப்பி சென்று விட்டதாக கூறி, அந்நாட்டில் உள்ள ராணுவ தளபதி தற்போது ராணுவ ஆட்சியை அமல்படுத்தியுள்ளார்.

இது தற்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. உலகம் முழுவதும் தற்போது வங்கதேச நாட்டில் நடக்கும் சம்பவங்களை உற்றுநோக்கி வரும் நிலையில், ஷேக் ஹசீனா தப்பிச் சென்ற விமானம் குறித்து பலர் பல்வேறு விதமான பேசி வருகிறார்கள். இது குறித்த விரிவான விபரங்களை காணலாம்.

வங்கதேச நாட்டின் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்து விட்டு நாட்டிலிருந்து தப்பி சென்று விட்டார். இதனால் அந்த நாட்டில் ராணுவ ஆட்சி அமலுக்கு வந்தது. இது குறித்து அறிவிப்பு வெளியானவுடன் அவர் எப்படி தப்பி சென்றார் என்ற கேள்வி மக்கள் மத்தியில் மிகப்பெரிய கேள்வியாக இருந்தது. இதற்கு பதிலாக அவர் விமானத்தை பயன்படுத்தி தப்பிச்செல்லும் தகவல் வெளியானது.

தற்போது உலகம் முழுவதும் பறக்கும் விமானங்களை டிராக் செய்வதற்காக ஆன்லைன் மூலம் பல்வேறு வசதிகள் இருக்கிறது. இப்படியாக வங்கதேச விமானப்படைக்கு சொந்தமான சி130ஜே ஹெர்குலஸ் என்ற விமானத்தில் தான் அவர் தப்பி செல்கிறார் என்ற செய்தி வெளியானவுடன் ஆன்லைன் மூலம் இந்த விமானத்தை டிராக் செய்ய துவங்கினார்கள். இந்த விமானம் கொல்கத்தா வழியாக டெல்லியில் தரையிறங்கியுள்ளது.

டெல்லியில் திரையரங்கிய பின்பு மீண்டும் அந்த விமானம் வங்கதேசத்திற்கு சென்றதாக இந்திய அரசு தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஷேக் ஹசீனா வெளிநாட்டிற்கு தப்பிச் சென்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது ஐரோப்பா நாட்டிற்குள் இவர் தஞ்சம் புகுந்து இருக்கலாம் என கூறப்படுகிறது. இவ்வளவு பெரிய பிரச்சினையை ஏற்படுத்திவிட்டு இவர் தப்பிச்சென்ற விமானம் தற்போது விவாத பொருளாக மாறி உள்ளது.




இவர் தப்பி சென்ற சி-130 ஜே ஹெர்குலிஸ் சென்ற விமானம் மார்டனான அதே நேரம் மேம்படுத்தப்பட்ட தொழிற்நுட்பத்தை கொண்ட விமானமாக இருக்கிறது. இதில் டிஜிட்டல் ஏவியானிக்ஸ், அட்வான்ஸ் நேவிகேஷன் சிஸ்டம், கிளாஸ் காக்பிட் ஆகிய அம்சங்கள் இருக்கிறது இதனால் இந்த விமானம் பாதுகாப்பானதாகவும் அதே நேரம் சிறப்பாக செயல்படும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த விமானம் பல்வேறு விதமான மஷின்களுக்கு பயன்படுத்தப்படும் முக்கியமாக எதிரிகள் கண்ணில் படாதபடி விரைவாக ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு பயணிக்க வேண்டும் என்றால் இந்த ரக விமானத்தை தான் பயன்படுத்துவார்கள். இது போக யாருக்காவது மருத்துவ உதவி தேவைப்பட்டாலும் இந்த விமானங்கள் பயன்படுத்தப்படும்.



நாட்டில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டு மக்களுக்கு நிவாரண பொருட்களை விநியோகம் செய்வதற்கும் இந்த விமானம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதுபோக சிறப்பான ஆப்ரேஷன்களுக்கும் இந்த விமானம் பயன்படுத்தப்பட்டது. இந்த விமானத்தின் வடிவமைப்பு இதற்கெல்லாம் ஏற்றார் போல் இருந்தது. முக்கியமாக குறுகிய பகுதிகளிலும், குறைவான ஏர் ஸ்டிரிப் இருக்கும் பகுதிகளிலும் இந்த விமானத்தை ஆப்ரேட் செய்ய முடியும்.

இந்த சி-130 ஜே விமானத்தில் அதிகமான பயணிகள் மற்றும் அதிகமான சரக்குகளை ஏற்றிச் செல்ல முடியும். இந்த விமானத்தில் 92 பயணிகள் அல்லது 64 ஏரோ ட்ரூப்க்களை எடுத்துச் செல்ல முடியும். இதுபோக 20 டன் எடை கொண்ட சரக்குகளை கொண்டு செல்லவும் இந்த விமானத்தில் இட வசதி இருக்கிறது.

இந்த விமானத்தின் சிறப்பு அம்சமே இந்த விமானத்தின் வேகம் தான். இந்த விமானம் 362 நாட்ஸ் அதாவது மணிக்கு 670 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்கும் திறன் கொண்டதாக இருக்கிறது. ஒருமுறை இந்த விமானத்தை டேக் ஆப் செய்து விட்டால் சுமார் 1600 நாட்டிகல் மைல் அதாவது 2963 கிலோ மீட்டர் வரை தொடர்ந்து பயணிக்க முடியும்.

இந்த சி-130 ஜே விமானத்தில் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் இருக்கிறது. முக்கியமாக இன்ஃப்ரா ரெட் கவுண்டர் மெசர், ஆயுதம் தாங்கிய சிஸ்டம், மார்டனான சென்சார்கள் எல்லாம் பொருத்தப்பட்டுள்ளது. இது எதிரிகளிடம் இருந்து இந்த விமானத்தை பாதுகாக்க உதவும். மேலும் இந்த விமானம் குறைவான உயரத்தில் பறக்கும் திறன் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் எதிரிகளின் ரேடாரில் இந்த விமானம் சிக்காமல் எதிரிகளை தாக்கும் திறன் கொண்டதாக இருக்கிறது.

டிரைவ்ஸ்பார்க் கருத்து: உலகம் முழுவதும் தற்போது வங்கதேசத்தில் நடக்கும் பிரச்சனையை பற்றி பேசி வரும் நிலையில் பிரதமர் தப்பிச்சென்ற விமானத்தின் மூலம் தற்போது உலகம் முழுவதும் இந்த விமான பிரபலமாக உள்ளது. பல நாடுகளிடம் இது போன்ற விமானங்கள் வேண்டும் என்ற பேச்சு தற்போது எழுந்துள்ளது. மற்ற நாடுகளும் விரைவில் இது போன்ற விமானத்தை சொந்தமாகி கொள்ளும் என எதிர்பார்க்கலாம்.

ஷேக் ஹசீனா தற்போது இந்தியாவில் இருக்கிறார், வங்கதேசம் என்னும் அண்டை நாட்டில் ஏற்பட்ட இந்த அரசியல் பூகம்பத்தின் அதிர்ச்சியை இந்தியாவிலும் உணர முடியும்.

இது இந்தியாவைப் பாதிக்கும் என்றும் இந்திய ஸ்திரத்தன்மையை விரும்புகிறது என்றும் வீணா சிக்ரி நம்புகிறார்.

அவர் கூறுகையில், “வங்கதேசம் உள்ளிட்ட அண்டைநாடுகள்அரசியல்நிலைத்தன்மையுடனும், அங்கே ஜனநாயகம் வேரூன்றி இருக்கவும் இந்தியா விரும்புகிறது. இந்தியாவின் ஆசை இதுதான். எனவே இந்த விவகாரத்தில் இந்தியா ஸ்திரத்தன்மையைக் கொண்டுவர முயற்சிக்கும்.

அரசியல் தவிர, வங்கதேசத்துடனான இந்தியாவின் வணிக உறவுகளும் மிகவும் வலுவானவை. தெற்காசியாவில் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக பங்காளியாக வங்கதேசம் உள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் சாலைகள், ரயில் பாதைகள் மற்றும் துறைமுகங்கள் அமைப்பதற்காக இந்தியா ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை வங்கதேசத்துக்கு வழங்கியுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில், வங்கதேசத்தில் ஏற்பட்டுள்ள இந்த கொந்தளிப்பை இந்தியா உன்னிப்பாக கவனித்து வருகிறது.

ஆகஸ்ட் 5 ஆம் தேதி, பிரதமர் நரேந்திர மோதியும் தனது அதிகாரப்பூர்வ இல்லத்தில் ஒரு உயர்மட்டக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார், இதில் உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

– B.நவின்குமார்



# 78-வது சுதந்திர தின உரையாற்றிய பிரதமர் மோடி,

## இந்தியாவின் வருங்காலத்திற்கான லட்சியத்துடன் கூடிய இலக்கை நிர்ணயித்துள்ளார்

78-வது சுதந்திர தின உரையாற்றிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, இந்தியாவை பல்வேறு துறைகளிலும் உலகின் முன்னணி நாடாக மாற்றுவதற்கு, நாட்டின் வளர்ச்சியை வடிவமைத்து, புதுமை கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளும் நோக்கில், வருங்காலத்திற்கான தொடர் இலக்குகளை நிர்ணயித்துள்ளார்.

பிரதமர் உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

1. **வாழ்க்கையை எளிதாக்கும் இயக்கம்:** ‘வாழ்க்கையை எளிதாக்குதல்’ என்ற தமது தொலைநோக்கு கொள்கையை ஒரு இயக்கமாக செயல்படுத்த இருப்பதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். முறையான மதிப்பீடுகள், கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதன் வாயிலாக நகர்ப்புறங்களில் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவது பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

2. **நாளந்தா உணர்வுக்கு புத்துயிரூட்டுதல்:** பண்டைக்கால நாளந்தா பல்கலைக்கழக உணர்வுக்கு புத்துயிரூட்ட வேண்டும் என்று தெரிவித்த பிரதமர், உயர்கல்வி கற்றல் மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம், இந்தியாவை உலகளாவிய கல்வி மையமாக மாற்ற வேண்டும் என்றார். 2024-ல் நாளந்தா பல்கலைக்கழகத்தை தொடங்கியிருப்பதில் இது அடங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

3. **இந்தியாவில் தயாரிக்கப்பட்டசிப்-செமிகண்டக்டர் உற்பத்தி:** செமிகண்டக்டர் உற்பத்தியில் இந்தியாவை உலகின் முன்னணி நாடாக மாற்றுவதற்கான உறுதிப்பாட்டை சுட்டிக்காட்டிய பிரதமர் மோடி, இறக்குமதியை சார்ந்திருக்கும் நிலையை குறைத்து, தொழில்நுட்ப தன்னிறைவை அதிகரிக்க வேண்டும் என்றார்.

4. **திறன் இந்தியா:** 2024 பட்ஜெட் பற்றி குறிப்பிட்ட பிரதமர், இந்திய இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளித்து, உலகின் திறன்மிகு தலைநகராக மாற்றும் நோக்கில் அரசு அறிவித்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க முன்முயற்சிகளை எடுத்துரைத்தார்.

5. **தொழில் உற்பத்தி மையம்:** இந்தியாவை உலகின் உற்பத்தி மையமாக மாற்றியமைப்பதற்கான தொலைநோக்குப் பார்வையை வெளியிட்ட பிரதமர் மோடி, அதன் பரந்து விரிந்த வளங்கள் மற்றும் திறன் பயிற்சி பெற்ற தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்கான திட்டங்களையும் அறி-வித்தார்.

6. **"இந்தியாவில் வடிவமைப்பு, உலகிற்கான வடிவமைப்பு":** உள்நாட்டு வடிவமைப்பு திறன் குறித்து பாராட்டிய பிரதமர், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு தேவையான பொருட்களை உற்பத்தி செய்யுமாறும் வலியுறுத்தினார்.

7. **உலகளாவிய விளையாட்டுச் சந்தையில் முன்னணி:** இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விளையாட்டுப் பொருட்களை சந்தைப்படுத்த, இந்தியா தனது செழுமையான பழங்கால மரபுகள் மற்றும் இலக்கியங்களை ஊக்குவிக்க வேண்டும் என பிரதமர் மோடி தெரிவித்தார். உலகளாவிய விளையாட்டுச் சந்தையில் இந்திய வல்லுநர்கள் முன்னிலை வகிக்க வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், விளையாடுவதில் மட்டுமின்றி, விளையாட்டுகளை உருவாக்குவதிலும் முன்னோடியாக திகழ்வதுடன், இந்திய விளையாட்டுகள் உலகளவில் சென்றடைய செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

8. **பசுமை வேலைவாய்ப்புகள் மற்றும் பசுமை ஹைட்ரஜன் இயக்கம்:** பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான இந்தியாவின் முயற்சியில் பசுமை வேலைவாய்ப்புகளின் முக்கியத்துவத்தை பிரதமர் மோடி வலியுறுத்தினார். பசுமை வளர்ச்சி மற்றும் பசுமை வேலை வாய்ப்பில் நாடு தற்போது கவனம் செலுத்துவதாக கூறிய அவர், இது சுற்றுச்சூழலைப் பாதுகாக்கக் கூடிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் தெரி-வித்தார்.

9. பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைகளில் நீடித்த வேலைவாய்ப்புகளை உருவாக்குவதென்ற இந்தியாவின் உறுதிப்பாட்டை பிரதமர் மீண்டும் வலியுறுத்தினார்.

10. **ஆரோக்கியமான இந்தியா இயக்கம்:** 2047-ல் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைய, இந்தியா, 'ஆரோக்கியமான இந்தியா' என்ற பாதையை பின்பற்ற வேண்டும் என்று கூறிய பிரதமர், இதற்காக தேசிய ஊட்டச்சத்து இயக்கம் தொடங்கப்பட்டு இருப்பதாக தெரி-வித்தார்.

11. **மாநில அளவிலான முதலீட்டுப் போட்டி:** முதலீடுகளை ஈர்க்கவும், நல்லாட்சிக்கான உத்தரவாதம் வழங்கவும், சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் நம்பிக்கையை உறுதிப்படுத்தவும், மாநில அரசுகள் தெளிவான கொள்கைகளை உருவாக்குமாறு பிரதமர் கேட்டுக்கொண்டார்.

12. **உலக குறியீடுகளுக்கேற்ப இந்தியாவின் தரம்:** தர நெறிமுறைகளை கடைபிடிப்பதற்கான உறுதிப்பாடு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற இந்தியாவின் எதிர்பார்ப்பை சுட்டிக்காட்டிய பிரதமர் மோடி, இந்தியாவின் தர விதிகள் சர்வதேச குறியீடாக மாறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்றார்.

13. **பருவநிலை மாற்ற இலக்குகள்:** 2030-க்குள் 500 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி என்ற இலக்கை அடைவதற்கான இந்தியாவின் குறிக்கோளையும் பிரதமர் மீண்டும் உறுதிப்பட தெரிவித்தார்.

14. **மருத்துவக் கல்வி விரிவாக்கம்:** அடுத்த ஐந்து ஆண்டுகளில் 75 ஆயிரம் புதிய மருத்துவ இடங்கள் கூடுதலாக சேர்க்கப்பட இருப்பதாக அறிவித்த பிரதமர் மோடி, நாட்டின் மருத்துவக் கல்வி திறனை விரிவுபடுத்தி, அதிகரித்து வரும் சுகாதார சேவை வல்லுநர்களின் தேவையை பூர்த்தி செய்வதே இதன் நோக்கம் என்றார்.

15. **அரசியலில் புது ரத்தம் பாய்ச்சுதல்:** அரசியலில் ஒரு லட்சம் இளைஞர்களை, குறிப்பாக அரசியல் பின்புலம் இல்லாத குடும்பங்களை சேர்ந்தவர்களை ஈடுபடுத்த வேண்டும் என்று பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார். வாரிசு, சாதிய தீமைகளை எதிர்த்துப் போராட, இந்திய அரசியலில் புது ரத்தம் பாய்ச்சுவதே இதன் நோக்கம் என்றும் தெரிவித்தார்.

– சிவசங்கர்

# விஜய் கட்சி கொடி சொல்லும் செய்தி என்ன?




நடிகரும் தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவருமான விஜய், ஆகஸ்ட் 22ஆம் தேதி, வியாழன் அன்று சென்னை பனையூரில் அமைந்திருக்கும் அவரின் கட்சி அலுவலகத்தில் கட்சிக் கொடியையும் கட்சியின் பாடலையும் அறிமுகம் செய்து வைத்தார்.

நடிகர் விஜய் சென்னையின் நீலாங்கரையில் அமைந்திருக்கும் அவருடைய இல்லத்தில் இருந்து பனையூருக்குச் சென்றார். அவருடைய அம்மா ஷோபா, அப்பா சந்திரசேகர் ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

நூற்றுக்கணக்கான ரசிகர்கள் மற்றும் கட்சித் தொண்டர்கள் கட்சி அலுவலகத்தில் குவிந்திருந்தனர். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன் ஆகியோர் நடிகர் விஜய்க்கு தங்களின் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**உறுதி மொழி ஏற்ற கட்சியினர்**

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய நிகழ்வில் கட்சிக் கொடியையும், கொடிப் பாடலையும் நடிகர் விஜய் துவங்கி வைத்தார். கொடியை அறிமுகம் செய்வ தற்கு முன்பு அக்கட்சியினர் அனைவரும் உறுதிமொழியை ஏற்றனர்.

“நமது நாட்டின் விடுதலைக்காகவும், நமது மக்களின் உரிமைகளுக்காகவும், தமிழ் மண்ணில் இருந்து தீரத்துடன் போராடி உயிர்நீத்த எண்ணற்ற வீரர்களின் தியாகத்தை எப்போதும் போற்றுவேன். நமது அன்னைத் தமிழ் மொழியைக் காக்க உயிர்த் தியாகம் செய்த மொழிப்போர் தியாகிகளின் இலக்கை நிறைவேற்றும் வகையில் தொடர்ந்து பாடுபடுவேன்.

இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் மீதும் இறையாண்மை மீதும் நம்பிக்கை வைத்து அனைவருடன் ஒற்றுமை, சகோதரத்துவம், மத நல்லிணக்கம், சமத்துவம் ஆகியவற்றைப் பேணிக் காக்கின்ற பொறுப்பு உள்ள தனிமனிதராகச் செயல்படுவேன்.”

“மக்களாட்சி, மதச்சார்பின்மை, சமூக நீதி பாதையில் பயணித்து என்றும் மக்கள் நல சேவகராகக் கடமையாற்றுவேன் என உறுதி அளிக்கிறேன்.



சாதி, மதம், பாலினம், பிறந்த இடம் ஆகியவற்றின் பேரில் உள்ள வேற்றுமைகளைக் கலைந்து, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அனைவருக்கும் சமவாய்ப்பு, சம உரிமை கிடைக்கப் பாடுபடுவேன்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சமத்துவக் கொள்கையைக் கடைபிடிப்பேன் என்று உளமாற உறுதி கூறுகின்றேன்" என்ற உறுதிமொழியை அவர் வாசிக்க அவரது கட்சித் தொண்டர்கள் அதை உறுதிமொழியாக ஏற்றுக்கொண்டனர்.

**த.வெ.க. கட்சிக் கொடியின் முக்கிய அம்சங்கள் என்ன?**

கட்சிக்கொடி சிவப்பு, மஞ்சள் என இரண்டு நிறங்களைக் கொண்டுள்ளது. நடுவில் உள்ள மஞ்சள் நிறப் பட்டையில் இரண்டு ஆண் யானைகள் இடம் பெற்றுள்ளன.

நடுவில் இடம் பெற்றிருக்கும் சிவப்பு நிற வட்டத்தில் வாகை மலரும் அதைச் சுற்றி நட்சத்திரங்களும் இடம் பெற்றுள்ளன. 28 நட்சத்திரங்களில் 5 நட்சத்திரங்கள் நீல நிறத்திலும், இதர நட்சத்திரங்கள் பச்சை நிறத்திலும் இருப்பது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

நடிகர் விஜய் கடந்த பிப்ரவரி மாதம் தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியைத் துவங்கி அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். டெல்லியில் உள்ள இந்திய தேர்தல் ஆணையத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் என்.ஆனந்த் அக்கட்சியைப் பதிவு செய்தார்.

தமிழ்நாட்டில் 2026ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவதை இலக்காகக் கொண்டு தமிழக அரசியலில் களம் இறங்கியுள்ளது விஜயின் கட்சி.

**நடிகர் விஜய் என்ன பேசினார்?**

கட்சியின் பெயர் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்தே தொண்டர்கள் காத்துக் கொண்டிருக்கும் ஒரு தேதியை, கட்சியின் மாநாட்டு தேதியை, விரைவில் அறிவிப்பதாக அறிவித்தார் நடிகர் விஜய்.

கூடிய விரைவில் நடைபெற இருக்கும் இந்த மாநாட்டில் கட்சியின் கொள்கைகள் மட்டுமின்றி கட்சிக் கொடிக்கான விளக்கம் என்ன என்பதையும் அறிவிக்க இருப்பதாகக் கூறினார்.

முறையான அனுமதியைப் பெற்று அந்த மாநாடு நடத்தப்படும் என்று தெரிவித்த விஜய், இந்தக் கொடியை அறிமுகம் செய்ததில் பெருமை அடைந்ததாகவும் கூறினார்.

"இன்று நம் அனைவருக்குமே ஒரு சந்தோஷமான நாள். நான் என்னுடைய அரசியல் பயணத்தைத் துவங்கி, அதன் தொடக்கப் புள்ளியாக நமது கட்சியின் பெயரைக் கடந்த பிப்ரவரி மாதம் அறிவித்தேன். அன்றைய நாளில் இருந்தே ஒரு குறிப்பிட்ட நாளுக்காக நீங்கள் அனைவரும் காத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். நம் முதல் மாநில மாநாடு," என்று கூறினார்.

ஏற்கன்வே யானையை சின்னம் பகுஜன் சமாஜ் கட்சியில் அதிகாரபூர்வமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது விஜய் கட்சிபில் யானை பொறுத்திய கொடி வெளியிட்டு இருப்பதால் கொடிக்கு தடை வருமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். - வீ.அய்யனார்

# கார்கில் வெற்றி தினத்தில் பிரதமர் உரை

பாரத் மாதா கி - ஜே!
பாரத் மாதா கி - ஜே!
மலைப்பகுதி முழுவதும் குரல் ஒலிக்கட்டும்
பாரத் மாதா கி - ஜே!
பாரத் மாதா கி -ஜே!

வீரம் செறிந்த பூமியான லடாக், கார்கில் வெற்றியின் 25-வது ஆண்டு நிறைவை 26.07.2024 அன்று கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்த கார்கில் வெற்றி தினம் நாட்டிற்காக உயிர் நீத்தவர்களின் தியாகத்தை நமக்கு நினைவுபடுத்துவதாக உள்ளது. நாட்கள், மாதங்கள், ஆண்டுகள், தசாப்தங்கள், நூற்றாண்டுகள் கடந்தாலும், காலங்கள் மாறினாலும், நாட்டைப் பாதுகாப்பதற்காக தங்களது இன்னுயிரை ஈந்த வீரர்களின் பெயர் எப்போதும் அழியாது. நமது பாதுகாப்பு படைகளின் பணியாற்றும் துணிச்சலான வீரர்களுக்கு இந்த நாடு எப்போதும் கடமை பட்டிருக்கிறது. இந்த நாடு அவர்களுக்கு என்றைக்கும் நன்றி உடையதாக இருக்கும்.

நண்பர்களே,

கார்கில் போரின் போது ஒரு சாதாரண குடிமகனாக நமது வீரர்களுடன் இருக்கும் பெரும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இன்று கார்கில் பூமியில் நான் மீண்டும் நிற்கிறேன் என்றால், இயற்கையாகவே அந்த நினைவுகள் என் மனதில் அழியாமல் உள்ளது தான் காரணம். நமது படையினர், எவ்வளவு உயரத்தில் போரில் ஈடுபட்டனர் என்பதை நான் நினைத்துப் பார்க்கிறேன்.

கார்கில் போரில் நாம் சாதாரணமாக வெற்றி பெற்றுவிடவில்லை. உண்மை, பொறுமை மற்றும் திறனை திறம்பட வெளிப்படுத்தி வெற்றி பெற்றோம். அந்த நேரத்தில் இந்தியா அமைதியைத்தான் விரும்பியது என்பதை




நீங்கள் அறிவீர்கள். ஆனால் பாகிஸ்தானோ, அதன் நம்பகமற்றதன்மையை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தியது. தவறான பிரச்சாரங்களும், பயங்கரவாதமும், உண்மைக்கு முன்னால் மண்டியிட்டது.

பாகிஸ்தான் கடந்த காலத்தில் மேற்கொண்ட அனைத்து விபரீத முயற்சிகளிலும் தோல்வியைத்தான் தழுவியுள்ளது. ஆனாலும் வரலாற்றில் இருந்து பாகிஸ்தான் பாடம் கற்றதாக தெரியவில்லை. அந்த நாடு இன்னும் தீவிரவாதத்தைத்தான் நம்பிக் கொண்டிக்கிறது. ஆனால் தற்போது நான் நின்று பேசி கொண்டிருக்கும் இடத்தில் தீவிரவாதத்தின் ஊற்றுகண்ணாக இருப்பவர்கள் எனது குரலை நேரடியாக கேட்டு கொண்டிருப்பார்கள். தீவிரவாதத்திற்கு ஆதரவளிப்போரின் தீய எண்ணங்கள் ஒரு போதும் வெற்றி அடையாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

– K.மாரிதுரை

# சட்டம் ஒழுங்கை காக்க முடியாவிட்டால் திமுக அரசு பதவி விலக வேண்டும்

## அன்புமணி இராமதாஸ்

தமிழ்நாட்டில் ஒரே நாளில் மட்டும் 3 கொடிய அரசியல் படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. கடலூர் நகர அதிமுக வட்ட செயலாளரான பத்மநாதன் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை திருப்பணாம்பாக்கம் என்ற இடத்தில் நடந்து சென்று கொண்டிருந்த போது அவர் மீது மகிழுந்தை மோதிச் சாய்த்த ஒரு கும்பல் சரமாரியாக வெட்டிக் கொலை செய்திருக்கிறது.

சிவகங்கை மாவட்டம் வேலாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த பாரதிய ஜனதா கட்சியின் கூட்டுறவு அணி மாவட்ட செயலாளர் செல்வகுமார், இளையான்குடி சாலையில் செல்லும் போது மர்ம ஆட்களால் வெட்டிப் படுகொலை செய்யப் பட்டுள்ளார். கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் பேரூராட்சியின் காங்கிரஸ் உறுப்பினர் உஷாராணியின் கணவர் ஜாக்சனை இரு சக்கர ஊர்திகளில் வந்த கும்பல் வெட்டிப்படுகொலை செய்திருக்கிறது.

தமிழ்நாட்டில் சட்டம் -ஒழுங்கு முழுமையாக தோல்வியடைந்து விட்டது என்பதையே இந்த படுகொலைகள் காட்டுவதாகவும், சட்டம் - ஒழுங்கை காக்க முடியாவிட்டால் திமுக அரசு பதவி விலக வேண்டும் என்றும், பாமக தலைவர் மருத்துவர் அன்புமணி இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த அவரின் அறிக்கையில், “படுகொலை செய்யப்பட்டவர்கள் அனைவருமே முன்விரோதம் காரணமாகத் தான் படுகொலை செய்யப்பட்டார்கள் என்று கூறி காவல்துறை அதன் கடமையை தட்டிக்கழிக்கக் கூடாது. கொல்லப்பட்ட மூவருக்குமே முன்விரோதம் இருந்திருக்கிறது என்பது உண்மை தான்.

அரசியலில் இருக்கும் ஒருவருக்கு எவருடனாவது முன்விரோதம் இருந்தால், அவரது உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று தான் பொருள் ஆகும். அதனால், அவர்களுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தல்களை ஆய்வு செய்து, அவர்களுக்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருக்க வேண்டும். ஆனால், அதை செய்ய காவல்துறை தவறிவிட்டது.

கொடூரமான அரசியல் படுகொலைகள் ஒரு புறம் இருக்க போதைக் கலாச்சாரமும், அதனால் நிகழும் குற்றச்ச்செயல்களும் தலைவிரித்து ஆடுகின்றன.



சென்னை காசிமேடு பகுதியில், 17 வயது சிறுவன் கஞ்சா போதையில் கையில் கத்தியுடன், இன்னொரு சிறுவனை கொடூரமாக தாக்கும் காணொலி காட்சிகள் இணையதளங்களில் வேகமாக பரவி வருகின்றன.

தடை செய்யப்பட்ட கஞ்சா போதைப் பொருள், 17 வயதான சிறுவனால் எளிதில் வாங்கும் அளவுக்கு தாராளமாக புழக்கத்தில் உள்ளது என்றால் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு எந்த அளவுக்கு சீர்கொட்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் தலையாயக் கடமை சட்டம் - ஒழுங்கை பாதுகாப்பது தான். ஆனால், எந்த அச்சமும் இல்லாமல் குற்றவாளிகள் நடமாடுகின்றனர். இதைத் தடுக்க முடியாமல் காவல்துறை திணறிக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைவதற்கு இது தான் காரணமாகும்.

இனியாவது காவல்துறையை தட்டி எழுப்பி, தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கை பாதுகாக்க வேண்டும் என்று ஆணையிட வேண்டும். அதை செய்ய முடியா விட்டால், தமிழ்நாட்டில் கடந்த இரு மாதங்களில் நடந்த அரசியல் படுகொலைகளுக்கு பொறுப்பேற்று திமுக அரசு பதவி விலக வேண்டும்“ என்று அன்புமணி இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

- துரை. சந்துரு



# காவல்துறையில் பெண்கள் நியமனத்தை அதிகரிக்க நடவடிக்கை: இணையமைச்சர் திரு நித்யானந்த் ராய்

“காவல் துறை” என்பது இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் பட்டியல்-II-ல் இடம்பெற்றுள்ள ஒரு மாநிலப் பட்டியலாகும். பாலின சமநிலையை மேம்படுத்துவது உட்பட அதிக பெண் காவலர்களை நியமிப்பது மாநில அரசுகள் / யூனியன் பிரதேச நிர்வாகங்களின் முதன்மையான பொறுப்பாகும். காவல்துறையில் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய அரசு ஆலோசனைகளை வழங்குகிறது.

மத்திய உள்துறை அமைச்சகம் அனைத்து மாநில அரசுகள் / யூனியன் பிரதேச நிர்வாகங்களுக்கு பெண் காவலரின் பிரதி-நிதித்துவத்தை மொத்த எண்ணிக்கையில் 33% ஆக உயர்த்த வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. காவலர்களை, உதவி ஆய்வாளர்கள் பணியிடங்களுக்கு கூடுதல் பெண் காவலர்கள் / உதவி ஆய்வாளர்கள் பணியிடங்களை உருவாக்க அனைத்து மாநில அரசுகள் / யூனியன் பிரதேச நிர்வாகங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு காவல் நிலையத்திலும் குறைந்தது 3 பெண் உதவி ஆய்வாளர்கள், 10 பெண் காவலர்கள் இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம். காவல் துறையில் பெண்கள் சேருவதற்கு, காவல் நிலையங்களில் பெண் காவலர்களுக்கு வீட்டுவசதி, மருத்துவ மற்றும் ஓய்வறை வசதிகள் போன்ற உகந்த பணிச்சூழலை உறுதி செய்யவும், பெண் காவலர்களுக்கான நலத்திட்டங்களை வலுப்படுத்தவும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் மாநிலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் 1.1.2023 நிலவரப்படி, 2,63,762 பெண் காவலர்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் 25,334 பெண் காவலர்கள் உள்ளனர்.

இத்தகவலை மத்திய உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த் ராய் மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு அளித்த பதிலில் தெரிவித்தார். – K.ரமேஷ்குமார்

# ஆகஸ்ட் 10: உலக சிங்க தினம்; பாதுகாவலர்களுக்கு மோடி பாராட்டு



உலக சிங்க தினத்தையொட்டி, பிரமிக்க வைக்கும் படங்களை பகிர்ந்த பிரதமர் மோடி, பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் பாராட்டியுள்ளார்.

ஆண்டுதோறும் ஆகஸ்ட் 10ம் தேதி உலக சிங்கங்கள் தினம் கடைபிடிக்கப்படுகிறது. சிங்கங்களை பாதுகாப்பது, குறைந்து வரும் அவற்றின் எண்ணிக்கையை அதிகரிப்பது, அது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்த தினத்தின் நோக்கம்.

இதையொட்டி சிங்கங்கள் புகைப்படங்களை சமூக வலை வலைதளத்தில், பிரதமர் மோடி பகிர்ந்துள்ளார். அவரது அறிக்கை: உலக சிங்க தினத்தன்று, சிங்கங்களை பராமரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் நான் பாராட்டுகிறேன். நாம் அனைவரும் அறிந்தபடி, இந்தியாவில் குஜராத்தின் கிர் பகுதியில் அதிக சிங்கங்கள் வசிக்கின்றன.

எண்ணிக்கை உயர்வு

தொடர் பாதுகாப்பு முயற்சிகளின் காரணமாக, சிங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இங்கு வரும் அனைவருக்கும், சிங்கத்தைப் பாதுகாக்க மேற்கொள்ளப்படும் முயற்சிளை கவனிக்கும் வாய்ப்பு கிடைக்கும். அதே நேரத்தில் குஜராத் மக்களின் சிறப்பான விருந்தோம்பலும் கிடைக்கும். இவ்வாறு மோடி கூறியுள்ளார்.

– ம.திலிப் குமார்

# தமிழ்ப் புதல்வன் திட்ட துவக்க விழா






முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் மக்கள் போற்றும் திராவிட மாடல் நல்லாட்சியில் உயர்கல்வி பயிலும் அரசு பள்ளி, அரசு உதவிபெறும் பள்ளி (தமிழ்வழி) மாணவர்கள் மாதந்தோறும் ரூ.1000/- 3.28 லட்சம் கல்லூரி மாணவர்கள் பயன் பெறும் தமிழ்நாட்டு மாணவர்கள் தரணியை வென்றிட தமிழ்ப்புதல்வன் திட்டத்தை கோயம்பத்தூர் மாவட்டம் கோயம்பத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் துவக்கி வைத்ததினை தொடர்ந்து, திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், கரியம்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் தர்பகராஜ் IAS அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களாக திருப்பத்தூர் மாவட்ட திமுக செயலாளரும், ஜோலார்பேட்டை சட்ட மன்ற உறுப்பினருமான க.தேவராஜ் MLA, திருப்பத்தூர் சட்ட மன்ற உறுப்பினரும் திருப்பத்தூர் மேற்கு ஒன்றிய திமுக செயலாளருமான அ.நல்லதம்பி MLA, மாநில பெற்றோர் ஆசிரியர் கழக துணை தலைவரும், மாவட்ட ஊராட்சி குழு தலைவரும் (மாவட்ட சேர்மன்) நாட்டறம்பள்ளி மேற்கு ஒன்றிய கழக செயலாளருமான NKR. சூரியகுமார். BA, Ex. MLA, அம்பூர் சட்ட மன்ற உறுப்பினர் A.C.வில்வநாதன் விலிகி, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்தினர். நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணை முதல்வர், இருபால் பேராசிரியர்கள், உள்ளாட்சி பிரதிநி-திகள், ஒன்றிய திமுக செயலாளர்கள், ஒன்றிய திமுக நிர்வாகிகள், ஊராட்சி திமுக நிர்வாகிகள் இருபால் கல்லூரி மாணவர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

- S.மோகன்

# வாணியம்பாடி அருகே 3 நடுகற்கள் கண்டெடுப்பு







வாணியம்பாடி அருகே பழங்கால 3 நடுகற்கள் கண்டெடுத்துள்ளனர். திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் தமிழ்த் துறை பேராசிரியர் முனைவர் க.மோகன்காந்தி, வரலாற்று ஆய்வாளர் காணிநிலம் மு.முனிசாமி வாணியம்பாடியைச் சேர்ந்த சித்த வைத்தியர் சீனிவாசன் ஆகியோர் மேற்கொண்ட கள ஆய்வில் வரலாற்றுச் சிறப்புமிக்க 3 நடுகற்களை கண்டெடுத்துள்ளனர்.

இது குறித்து முனைவர் க.மோகன்காந்தி கூறியதாவது:-

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியை வடக்குப்பட்டு என்ற கிராமத்தில் தருமராஜா-திரௌபதி அம்மன் ஆலயத்தின் கருவறைக்கு அருகில் 15 அடி உயரத்துடன் சிறிய அளவில் உள்ளது. வலது கையில் வாளை ஏந்திய கோலத்தில் காணப்படுகிறது. இந்நடுகல் வழிபாட்டில் உள்ளது. இக்கோயில் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. மீன், பாம்பு உள்ளிட்ட உயிரினங்களின் சிற்பங்கள் இக்கோயிலின் மேல் கூரைகளில் உள்ளன.

இரண்டாவது நடுகல் நாயக்கர் காலத்தைச் சேர்ந்த கி.பி 16 ஆம் நூற்றாண்டு உடன்கட்டை நடுகல் லாகும். இந்நடுகல்லை இவ்வூர் மக்கள் மலைதேவன் சிலை என்ற பெயரில் வழிபட்டு வருகின்றனர். 25 அடி அகலமும் 2.3 உயரமும் இன்னும் 2 அடி ஆழத்திற்குப் புதைந்தும் இந்நடுகல்லானது காணப்படுகிறது.

இச்சிலையின் அமைப்பானது நடுகல் வீரனின் தலைமுடி வாரி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டையாக அது காட்சி தருகிறது. காதுகளில் குண்டலங்கள் உள்ளன. வலது கையில் குறுவாள் ஒன்று ஏந்திய கோலத்தில் வீரன் உள்ளார். வீரனின் வலது பக்கத்தில் வீரப் பெண்மணியின் உருவம் இடம் பெற்றுள்ளது. இப்பெண் இந்நடுகல்லின் மனைவி ஆவார்.

வீரன் போரில் வீர மரணம் அடைந்தவுடன் அவனுடைய மனைவியும் இறங்கி நெருப்பில் இறங்கி உயிர் விட்டிருப்பாள். கணவனோடு மனைவி உயிர் விடுதலை உடன்கட்டை ஏறுதல் எனப்படும்.

மூன்றாவது நடுகல்லும் நாயக்கர் காலத்தைச் சேர்ந்த கி.பி 16 ஆம் நூற்றாண்டு நடுகல்லே ஆகும். இந்நடுகல் வாணியம்பாடிக்கு அருகே உள்ள திகுவாபாளையம் என்ற ஊரில் பிட்டாய் கவுண்டர் வட்டத்தில் பிரபு குமார் என்பவர் நிலத்தில் உள்ளது. இந்நடுகல்லின் அமைப்பானது 3 அடி உயரமும் 2.5 அகலமும் கொண்டதாக உள்ளது.

நடுகல் வீரனின் இடது கையில் தண்டு போன்ற ஆயுதம் ஒன்றும் வலது கையில் நீண்ட வாள் ஒன்றைத் தரையில் ஊன்றியபடியும் நிற்கின்றார். இவ்வீரன் போரில் வீர மரணம் அடைந்ததால் அவன் மனைவி உடன்கட்டை ஏறித் தன் உயிரை விட்டுள்ளார். உடன்கட்டை ஏறிதற்கான அடையாளமாக வலது புறமாக கள்குடம் ஒன்றைத் தாங்கியுள்ளார். இவை போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நடுகற்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று பேராசிரியர் க.மோகன்காதி கூறியுள்ளார்.

– S.மோகன்

# நீங்கள் நல்ல நாள் பார்ப்பது எப்படி?

**உங்களின் அனைத்து விசேஷத்திற்கும் நீங்களே நல்ல நாள் பார்க்க எளிய வழி!**

ஒவ்வொரு காலகட்டத்திலும் அவரவர் குடும்பங்களில் புதுமனை புகுதல், காதுகுத்துதல், திருமணம் என்று ஏதாவது ஒரு சடங்குகள் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கும். அப்படிப்பட்ட சமயங்களில் அனைவரும் தினசரி காலண்டரையோ அல்லது பஞ்சாங்கத்தையோ பார்த்து தான் நாள் குறிப்போம். ஒரு சிலர் ஏதாவது ஒரு ஜோசியர் அல்லது கோயில் குருக்களிடம் கேட்டு நல்ல நாள் குறிப்பார்கள். மேல்நோக்கு நாள், அமிர்தயோக நாள், சுபமுகூர்த்த நாள் என பொதுவாகப் பார்த்து நாள் குறிக்காமல் அவரவர் ராசி, நட்சத்திரம், பிறந்த தேதி, கிழமை இவற்றை அடிப்டையாகக் கொண்டு நாமே நல்ல நாள் பார்க்கலாம்.

**நாள் என்ன செய்யும்?**

நாள் (வாரம்), திதி, நட்சத்திரம், யோகம், கர்ணம் என்ற ஐந்தும் சேர்ந்ததே பஞ்சாங்கம். இந்த ஐந்தும் அடங்கிய பஞ்சாங்கத்தில் முதல் அங்கமாக வருவது வாரம் அதாவது கிழமை அல்லது நாட்கள். பஞ் சாங்கத்தில் நம் முன்னோர்கள் என்றைக்கு எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும் என்பதற்குக் கூட நாள் குறித்து வைத்திருக்கிறார்கள். ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகள் திருமணம், ஹோமம், சாந்திகள் போன்ற நற்காரியங்களுக்கு விசேஷமானவை. செவ்வாய் நெருப்பு கிரகம் என்பதால் செவ்வாய்க் கிழமை அக்னி சம்பந்தமான செயல்களுக்குரியது. சனிக்கிழமை இயந்திர சம்பந்தமான பணிகளுக்கு உரிய நாள்.

**ஞாயிற்றுக்கிழமை:** சூரியன் ஆரோக்கியத்தை அளிப்பவன். அதனால் நீண்டகால பிணிகளுக்கு மருத்துவர் ஆலோசனை பெற்று மருந்து உண்ண ஆரம்பிக்கலாம். வடக்கு திசை நோக்கி பயணம் செய்யலாம். அரசுப்பணித் தொடர்பான விஷயங்களுக்காக உரிய அலுவலர்களை நேரில் சந்திக்கலாம்.

**திங்கட்கிழமை:** தென்திசை நோக்கி பயணம் செய்யலாம். கிருகப் பிரவேசம் நடத்தலாம். காதுகுத்துதல், பெண் பார்த்தல், ருது சாந்தி செய்தல் (சாந்தி முகூர்த்தம்), சீமந்தம், விருந்து உண்ணல் போன்ற விசேஷங்களை செய்யலாம். ஆடுமாடு வாங்குதல், விதையிடுதல், உரமிடல், வியாபராம் துவங்குதல் ஆகியவையும் செய்யலாம்.

**செவ்வாய்க்கிழமை:** கிழக்கு திசை நோக்கி பயணம் செய்யலாம். வாங்கிய கடனை அடைத்தல், வயலுக்கு உரமிடல், செங்கல் சூளைக்கு நெருப்பிடுதல் ஆகியன செய்ய ஏற்ற நாள் இது. செவ்வாய்க்கிழமைகளில்



பொருள் வாங்கினால் அது வருவாயைப் பெருக்கும். அதனால் வீட்டில் செல்வம் பெருகும்.

**புதன் கிழமை:** மேற்கு திசை நோக்கி பயணம் செய்யலாம். புதிய ஆராய்ச்சி, எழுத்துப் பணிகளைத் துவங்கலாம். வழக்குகள் சம்பந்தமாக வழக்கறிஞரை சந்தித்தல், புதுமனை புகுதுல், குளம், ஏரி, கிணறு வெட்டுதல், நிலத்தை உழுதல், விதையிடுதல், அறுவடை செய்தல், காது குத்துதல், சீமந்தம், விருந்து உண்ணல் போன்ற சுபகாரியங்கள் செய்யலாம். கல்வி, கலை போன்றவற்றைக் கற்க ஆரம்பித்தல் ஆகியவற்றுக்கு ஏற்ற நாள் இது.

**வியாழக்கிழமை:** மேற்குதிசையில் பயணிக்கலாம். புதிய பணியில் சேரலாம். வங்கிப் பணிகள் கவனித்தல், பெரிய மனிதர்களை சந்தித்தல், சீமந்தம், ருது சாந்தி, காது குத்துதல், கிருகப் பிரவேசம், விவசாயம் சம்பந்தப்பட்ட பணிகள் இவற்றைச் செய்ய ஏற்ற தினம்.

**வெள்ளிக்கிழமை:** வடதிசை நோக்கி பயணம் செய்யலாம். பெண் பார்க்கச் செல்லலாம். காது குத்துதல், சாந்தி முகூர்த்தம், புதிய வாகனங்கள் வாங்குதல், நிலத்தினை உழுதல், உரமிடல் இவற்றைச் செய்ய ஏற்ற நாள் இது.

**சனிக்கிழமை:** தென்திசை நோக்கி பயணம் செய்யலாம். பூமி தொடர்பான விஷயங்கள் அதாவது வீடு, நிலம், மனை வாங்குதல், விற்றல் போன்ற செயல்களுக்கும், இயந்திரங்கள் வாங்குதல் போன்ற இரும்பு சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கும் உகந்த நாள்.

திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களை சுபநாட்கள் எனவும்; ஞாயிறு, செவ்வாய், சனி ஆகிய நாட்களை அசுப நாட்கள் எனவும் சிலர் கூறுவர். சுப நாட்களிலும் பிரதமை, அஷ்டமி, நவமி ஆகிய திதிகள் வரும் நாட்களை தவிர்ப்பது நல்லது. சில கிழமைகளில் வரும் நட்சத்திரங்களைப் பொறுத்தும் அன்று சுபகாரியங்கள் செய்வதை

தவிர்க்க வேண்டும்.

- **ஞாயிறு**-பரணி, கார்த்திகை, மிருகசீரிஷம், மகம், விசாகம், அனுஷம், கேட்டை, பூரட்டாதி
- **திங்கள்**-சித்திரை, கார்த்திகை, மகம், விசாகம், அனுஷம், பூரம், பூரட்டாதி
- செவ்வாய்-உத்திராடம், திருவாதிரை, கேட்டை, திருவோணம், அவிட்டம், சதயம்
- **புதன்**-அவிட்டம், அசுபதி, பரணி, கார்த்திகை, மூலம், திருவோணம், அவிட்டம்
- **வியாழன்**-கேட்டை, மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், பூராடம், ரேவதி
- வெள்ளி-பூராடம், ரோகிணி, மிருகசீரிஷம், பூசம், விசாகம், அஸ்தம், அனுஷம், அவிட்டம்
- **சனி**-ரேவதி, புனர்பூசம், பூசம், உத்திரம், அஸ்தம், ரேவதி

ஆகிய நட்சத்திரங்கள் வரும் கிழமைகள் சுபகாரியம் செய்ய ஏற்றவை அல்ல.

**திதிகள்:** திதி என்ற வடமொழிச் சொல்லுக்கு தொலைவு என்று அர்த்தம். குறிப்பாக திதி என்பது வானவெளியில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே ஏற்பட்ட தூரத்தின் பெயராகும்.

1. பிரதமை, 2. துவிதியை, 3. திருதியை, 4. சதுர்த்தி, 5. பஞ்சமி, 6. சஷ்டி, 7. சப்தமி, 8. அஷ்டமி, 9. நவமி, 10. தசமி, 11. ஏகாதசி, 12. துவாதசி, 13. திரயோதசி, 14. சதுர்த்தசி, 15. பவுர்ணமி (அ) அமாவாசை என்று மொத்தம் 15 திதிகள் உள்ளன. அமாவாசை, பவுர்ணமி ஆகிய இரண்டு திதிகள் தவிர மற்ற பதினான்கு திதிகளினால் சில சுப அசுபப் பலன்கள் ஏற்படக்கூடும். அதேபோல் சில கிழமைகளில் சில திதிகள் வந்தால் சுபப் பலன்களும், அசுபப் பலன்களும் ஏற்படும்.

**நற்பலன் தரும் திதிகள்:** ஞாயிறு-அஷ்டமி, திங்கள்-நவமி, செவ்வாய்-சஷ்டி, புதன்-திரிதியை; வியாழன்-ஏகாதசி, வெள்ளி-திரயோதசி, சனி-சதுர்த்தசி திதி. இத்தகைய நாட்களில் வரும் திதிகளில் எந்த ஒரு நல்ல காரியம் செய்தாலும் அது வெற்றியே கிட்டும்.

**சுபகாரியங்களுக்குக் கூடாத திதிகள்:** ஞாயிறு-சதுர்த்தசி, திங்கள்-சஷ்டி, செவ்வாய்-சப்தமி, புதன்-துவிதியை, வியாழன்-அஷ்டமி, வெள்ளி-நவமி, சனி-சப்தமி மேற்கூறியபடி குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட திதிகள் வரும்போது அந்த நாட்களில் நற்காரியங்கள் செய்வதை தவிர்ப்பது அவசியம். ஏனெனில் அன்று செய்யப்படும் நற்காரியங்கள் பலன் அளிக்காது. வளர்பிறை, தேய்பிறை ஆகிய காலங்களில் சில திதிகளுக்கு இரண்டு கண்கள் உண்டு. இத்திதிகளில் நற்காரியங்கள் செய்தால் நலந்தரும்.

**வளர்பிறை காலம்:** அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி திதிகள்.

**தேய்பிறை காலம்:** துவிதியை, திரிதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி திதிகள்.

**ஒரு கண்ணுள்ள திதிகள்:** வளர்பிறை, தேய்பிறை காலங்களில் சில திதிகளுக்கு ஒரு கண்மட்டுமே உண்டு. அதாவது இந்த சமயத்தில் செய்யப்படும் செயல்கள் பூரண பலன் தராது. எனவே இத்திதிகளில் சுபகாரியங்களைத் தவிர்ப்பது நல்லது. அந்தத் திதி காலங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்;-

| **வளர்பிறை** | **தேய்பிறை** |
|---|---|
| பஞ்சமி | பிரதமை |
| சஷ்டி | அஷ்டமி |
| சப்தமி | நவமி |
| சதுர்த்தசி | தசமி |
| பவுர்ணமி | ..... |

**பொதுவாக பலரும் தவிர்க்கும் திதிகள்:** வளர்பிறை, தேய்பிறை ஆகிய இரண்டு காலங்களிலுமே அஷ்டமி, நவமி திதிகளையுமே தவிர்ப்பர். அமாவாசை, பவுர்ணமிக்கு முந்தைய நாளாக வரும் சதுர்த்தசியும், அடுத்த நாளாக வரும் பிரதமையும் ஆகாத திதிகளாகும். இவ்விரண்டு திதிகள் வரும் நாட்களில் எந்த ஒரு நல்ல காரியத்தைத் துவங்கினாலும் பொருள் நஷ்டம், எதிர்ப்பு, விரோதம், நோய் போன்ற பாதிப்புகள் வரக்கூடும்.

**நட்சத்திர பலன்கள்:** பொதுவாக ஒரு குழந்தை பிறந்ததுமே பலரும் பார்ப்பது அன்று என்ன நட்சத்திரம் என்பதைத் தான். காரணம், ஜோதிட ரீதியான 27 நட்சத்திரங்களுள் ஏதாவது ஒன்றுதான் எல்லோருடைய வாழ்க்கையிலுமே ஆதிக்கம் செலுத்தும். அது அவரவர் பிறந்ததினத்தில் அமையும் நட்சத்திரமே. தனிப்பட்ட நபருக்கு உரியது என்றில்லாமல் பொதுவாக எல்லோருக்கும் நன்மை அளிப்பன என்றும் ஆகாதவை எனவும் சில நட்சத்திரங்கள் கூறப்பட்டுள்ளன. திருவாதிரை, பரணி, கார்த்திகை, ஆயில்யம், பூரம், பூராடம், பூரட்டாதி, கேட்டை, விசாகம், சுவாதி, சித்திரை, மகம் ஆகிய பன்னிரண்டு நட்சத்திரங்கள் வரும் நாட்களில் கடன் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. அதேநாட்களில் வெளியூர்ப் பிரயாணம் மேற்கொள்வது கூடாது. கடுமையான நோய்வாய்ப்பட்டவர் அன்று சிகிச்சையை ஆரம்பிக்கக் கூடாது.

**யோகங்கள்:** பொதுவாக பலருக்கும் தெரிந்தது அமிர்தயோகம், சித்தயோகம், மரணயோகம் எனும் மூன்று யோகங்கள். இந்த யோகங்கள் நட்சத்திரங்களின் அடிப்படையில் கணிக்கப்படுபவை. பரணி, புனர்பூசம், பூரம், சுவாதி, பூராடம், உத்திரட்டாதி எல்லா கிழமைகளிலும் நற்பலன்களைத் தரக்கூடியவையாகும். அசுவினி-புதன், மிருகசீரிஷம்-வியாழன், பூசம்-வெள்ளி, சித்திரை-சனி, அனுஷம்-ஞாயிறு, மூலம்-புதன், உத்திராடம்-திங்கள், திருவோணம்-வெள்ளி இந்த நட்சத்திரங்கள் இந்தக் கிழமைகளில் வருவதைத் தவிர, இதர கிழமைகளில் எல்லாம் நற்பலன்களை கொடுக்கக்கூடியவையாகும்.

**ராகுகாலம்:** சர்ப்ப கிரகங்கள், சாயா கிரகங்கள் என்றெல்லாம்

அழைக்கப்படுபவை ராகு, கேது கிரகங்கள். ஒவ்வொரு நாளிலும் சுமார் ஒன்றரை மணி நேரம் ராகுவுக்கு உரியதாக சொல்லப்பட்டுள்ளது. ராகு காலத்தில் புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நலம். கூடிய வரையில் இயன்றவரை அந்த சமயத்தில் புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

**ராகுகாலம் என்று எப்போது?**

| | |
|---|---|
| ஞாயிறு | 4.30 மணி முதல் 6 மணி வரை |
| திங்கள் | 7.30 மணி முதல் 9 மணி வரை |
| செவ்வாய் | 3 மணி முதல் 4.30 மணி வரை |
| புதன் | 12 மணி முதல் 1.30 மணி வரை |
| வியாழன் | 1.30 மணி முதல் 3 மணி வரை |
| வெள்ளி | 10.30 மணி முதல் 12 மணி வரை |
| சனி | 9 மணி முதல் 10.30 மணி வரை |

**எமகண்டம்**

எமகண்டம் என்பது மரணத்திற்கு சமமான விளைவினை ஏற்படுத்தக்கூடியது எனக்கருதப் படுகிறது. எமகண்ட நேரத்தில் ஒரு செயலை மேற்கொள்வது ஆபத்து. விபத்து, பிரச்னைகள் ஆகியவற்றை உருவாக்கும். இரவில் வரும் எமகண்ட காலத்தில் துவக்கும் காரியங்கள்கூட எதிர்மறை விளைவையே தரும். பகலில் வரும் எமகண்ட நேரம் பலருக்கும் தெரிந்திருக்கும். இங்கே ஒவ்வொரு நாளிலும் இரு வேளைகளிலும் வரும் எமகண்ட நேரத்தின் பட்டியல் இதோ...

| கிழமை | பகல் நேரம் | இரவு நேரம் |
|---|---|---|
| ஞாயிறு | 12.00-1.30 | 6.00-7.30 |
| திங்கள் | 10.30-12.00 | 3.00-4.30 |
| செவ்வாய் | 9.00-10.30 | 1.30-3.00 |
| புதன் | 7.30-9.00 | 12.00-1.30 |
| வியாழன் | 6.00-7.30 | 10.30-12.00 |
| வெள்ளி | 3.00-4.30 | 9.00-10.30 |
| சனி | 1.30-3.00 | 7.30-9.00 |

**குளிகன் அல்லது குளிகை காலம்:** குளிகன், சனிபகவானின் மகன் எனச் சொல்கிறது ஜோதிட சாஸ்திரம். அந்தக் குளிகனுக்கென ஒவ்வொரு நாளிலும் ஒதுக்கப்பட்டுள்ள நேரமே குளிகை காலம். தினசரி பகலில் ஒன்றரை மணி நேரமும், இரவில் ஒன்றரை மணி நேரமும் நடைபெறும். குளிகை காலத்தில் நற்காரியங்களை மட்டுமே செய்யலாம். ஏனெனில் இந்த நேரத்தில் செய்யப்படும் செயல் தடை இல்லாமல் தொடர்ந்து நடைபெறும் என்பது நியதி. எனவே அசுப காரியங்களைத் தவிர்ப்பது அவசியம்.

**கரிநாள்:** ஒவ்வொரு வருடமும் வரும் 365 நாட்களில் 34 நாட்கள் கரி நாளாக அமையும். இந்த நாட்களில் சுபகாரியங்களைத் தவிர்ப்பது நல்லது.

| மாதம் | தேதிகள் |
|---|---|
| சித்திரை | 6, 15 |
| வைகாசி | 7, 16, 17 |
| ஆனி | 1, 6 |
| ஆடி | 2, 10, 20 |
| ஆவணி | 2, 9, 28 |
| புரட்டாசி | 16, 29 |
| ஐப்பசி | 6, 20 |
| கார்த்திகை | 1, 10, 17 |
| மார்கழி | 6, 9, 11 |
| தை | 1, 2, 3, 11, 17 |
| மாசி | 15, 16, 17 |
| பங்குனி | 6, 5, 19 |

**வாரசூலை:** வாரசூலைக்கு சூலதோஷம் என்றும் பெயர். வாரசூலையை நிருவாணி சூலம் என்றும் களரி காலன் என்றும் அழைப்பதுண்டு. பகலில் வாரசூலை நேர் திசைகளிலும் இரவில் மூலை திசைகளிலும் இடம்பெற்று இருக்கும் என்பது ஜோதிட நியதி. வாரசூலை உள்ள திசையை நோக்கிப் பயணம் செய்வது கூடாது. அவசியம் பயணம் செய்ய வேண்டுமென்றால் பரிகாரம் மேற்கொண்டு பிரயாணம் செய்யலாம். வார சூலைக்கான பரிகாரம் செய்வது குறிப்பிட்ட பரிகாரப் பொருளை சிறிதளவு உண்டுவிட்டுப் பயணத்தைத் தொடங்குவது தான். சிலர் அப்பொருளை தானம் செய்வது வழக்கம்.

**தின ஓரையில் பயன்கள்:** ஒவ்வொரு மாதமும் தினமும் அந்தந்த ஊர்களில் சூரியன் உதிக்கும் நேரம் முதல் ஒவ்வொரு மணி நேரம் வரையில் ஒவ்வொரு கிரகத்தினுடைய ஆதிபத்திய காலம் நடைபெறும். அதைத்தான் அந்த கிரகத்தின் ஆதிபத்தியம் உள்ள ஓரை என்று சொல்வர். எந்தக் கிழமையில் சூரிய உதயம் ஆகிறதோ, அந்தக் கிழமைக்கு உரிய கிரகமே சூரிய உதய முதல் ஒரு மணி நேரத்துக்கான ஓரைக்கு ஆதிபத்தியம் வகிக்கிறது. உதாரணமாக திங்கட்கிழமை காலை 6 மணிக்கு சூரிய உதயமானால், அன்று காலை 6 மணி முதல் 7 மணி வரையில் சந்திரனே ஆதிபத்தியம் செய்வதால், அது சந்திர ஓரையாகிறது. அடுத்தடுத்த ஒரு மணி நேரம் உரிய வரிசைப்படியான கிரகத்திற்கு உரியதாகிறது. அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை சூரிய உதயத்தின் போது செவ்வாய் ஓரை ஆரம்பாகிறது. இப்படியாக கிரக ஓரைகள் ஒரு வட்டம் போல ஒன்றையடுத்து மற்றொன்று என்று தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. ராகுவும் கேதுவும் நிழல் கிரகங்கள் என்பதால் அவற்றுக்கு ஓரைகள் இல்லை. மாறாக ராகு காலம் என தனிக் காலம் உண்டு.

**சூரிய ஓரை:** விண்ணப்பம் செய்ய, அதிகாரிகளை சந்தித்தல், மருந்துண்ணல், சொத்துப் பிரிவினை செய்தல், வேலைக்கு முயற்சித்தல், அரசு அனுமதி பெறுதல், பதவி ஏற்றிடல் ஆகியன செய்யலாம்.

**சந்திர ஓரை:** திருமணத்துக்கு நாள் குறித்தல், பெண் பார்த்தல், ஆடை ஆபரணம் அணிதல், கல்வி கலை கற்றிட ஆரம்பித்தல், தொலைதூரப் பயணம் தொடங்குதல், கால்நடைகள் வாங்குதல் நலம் தரும்.

**செவ்வாய் ஓரை:** போர்க்கருவிகள் செய்தல், வாகனங்கள் பழுது பார்த்தல், போர் தொடுத்தால், வீடு மனை நிலம் வாங்குதல், விற்றல், மருந்துண்ணல், ஏரிக்கரை அல்லது அணை கட்டுதல் செய்யலாம். சுப காரியங்களைத் தவிர்ப்பது நல்லது.

**புதன் ஓரை:** ஜோதிட ஆராய்ச்சியில் ஈடுபடுதல், தேர்வு எழுதுதல், போட்டி பந்தயங்களில் பங்கேற்றல், கடிதத் தொடர்பு கொள்ளுதல், புதிய பொருள்களை வாங்குதல், புதிய கணக்கு ஆரம்பித்தல் செய்யலாம்.

**குரு ஓரை:** புதிய ஆடை ஆபரணம் வாங்குதல், அணிதல், சேமிக்கத் தொடங்குதல், வர்த்தகக் கொள்முதல் செய்தல், விதை விதைத்தல், நாற்று நடுதல், குரு உபதேசம் செய்தல், பெரியோர்களை சந்தித்து ஆசி பெறல் ஆகியவற்றுக்கு ஏற்ற காலம்.

**சுக்கிர ஓரை:** கலைகளைக் கற்கத் தொடங்குதல், திருமணத்திற்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தல், காதல் புரிதல், மருந்துண்ணல், பொருள் சேர்த்தல், கடன் வசூல் செய்தல், புதிய ஆடை ஆபரணம் அணிதல் செய்யலாம்.

**சனி ஓரை:** உழுதல், எருவிடுதல், இரும்பு, மின்சாதனங்களை வாங்குதல், தோப்பு துரவு (கிணறு) அமைத்தல், பயணம் செய்தல் போன்றவை செய்யலாம்.

**சந்திராஷ்டமம்:** நம் ஜோதிட சாஸ்திரப்படி ஒவ்வொருவருடைய ஜனனகால ஜாதகமும் சந்திரனை அடிப்படையாக வைத்தே கணக்கிடப்படுகிறது. அதாவது ஒருவர் பிறந்த போது சந்திரன் எந்த ராசியில் இருக்கிறதோ, அதுவே அவரது ஜனன ராசி என்றும், சந்திர லக்கினம் என்றும் கூறப்படுகிறது. கோள்களின் இயக்கத்தின் படி அதாவது கோசாரத்தின்படி சந்திரன் ஒருவரது ஜனன ராசிக்கு எட்டாம் வீடான அஷ்டம ஸ்தானத்தில் இருக்கும் காலமே அவரது சந்திராஷ்டம காலம் ஆகும். சந்திரன் ஒருவரின் எட்டாவது ராசிக்கு உரிய இரண்டேகால் நட்சத்திரங்களில் சஞ்சரிக்கும் அந்த சந்திராஷ்டம நாட்களில் அந்த நபர் இயன்றவரை புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டும். அவருக்கான சுபகாரியங்களை அதாவது திருமணம், பெண் பார்த்தல், பணியில் சேருதல் போன்ற மங்கள நிகழ்ச்சிகளை தவிர்ப்பது நல்லது. திட்டமிடாத திடீர் பயணங்களையும் வெளிநாடு, வெளியூர் பிரயாணங்களையும் தவிர்ப்பது அவசியம்.

(உதாரணமாக.. மேஷ ராசியினருக்கு எட்டாம் இடமான விருச்சிக ராசிக்கு உரிய விசாகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை நட்சத்திரங்களில் சந்திரன் வரும் தினங்கள் சந்திராஷ்டம நாட்களாகும்.)

**2 அமாவாசை 2 பவுர்ணமி:** அமாவாசை ஒரு நல்லநாள் என்றாலும், திருமணம் போன்ற சுபகாரியங்களுக்கு உகந்ததல்ல. அமாவாசையை விலக்குவதைப் போலவே ஒரே மாதத்தில் இரு அமாவாசை வந்தால் அதனை மல மாதம் என்பார்கள். இப்படிப்பட்ட அமைப்பு அநேகமாக 18 வருடங்களுக்கு ஒரு முறையே வரும். மல மாதத்தினை மட்டுமல்லாமல், மல மாதமுள்ள தமிழ் ஆண்டும் திருமணம் போன்ற நற்காரியங்களுக்கு ஏற்றதல்ல என்பது பொதுவிதி. ஒரே மாதத்தில் இரு பவுர்ணமிகள் வந்தால் அதுவும் மலமாதமே. ஆனால் பவுர்ணமி திதியில் சுபகாரியங்கள் மட்டுமே செய்யப்படுவதால் அந்த மாதத்தினை விலக்குவது இல்லை.

**கல்யாணத்திற்கு நாள் பார்ப்பது எப்படி?**

1. முதல் விதி, திருமணம் மல மாதத்தில் இடம்பெறக்கூடாது. (மலமாதம் என்பது இரண்டு அமாவாசை அல்லது இரண்டு பவுர்ணமி ஒரே மாதத்தில் வருவது.)

2. அடுத்ததாக சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, தை, பங்குனி தவிர இதர மாதங்களில் திருமணம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

3. இயன்றவரை சுக்கில பட்ச காலத்திலேயே திருமணம் செய்வது நல்லது என்பது மூன்றாவது விதி.

4. புதன், வியாழன், வெள்ளி போன்ற சுப ஆதிபத்தியமுடைய கிழமைகள் மிகமிக ஏற்றவை. இதர கிழமைகள் அவ்வளவு உகந்தவை அல்ல. இது 4வது விதி.

5. அடுத்த வித... ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், தனுசு, மீனம் ஆகிய சுப லக்கினங்களில் மட்டுமே திருமணம் நடத்த வேண்டும் என்பது தான்.

6. துவிதியை, திரிதியை, பஞ்சமி, ஸப்தமி, தசமி, திரயோதசி ஆகிய சுப திதிகள் தவிர இதர திதிகளை தவிர்ப்பது ஆறாவது விதி.

7. அடுத்ததாக முகூர்த்த லக்கினத்துக்கு 7ம் இடம் முகூர்த்த நாளன்று சுத்தமாக இருக்க வேண்டும்.

8. அக்கினி நட்சத்திரம், மிருத்யூ பஞ்சகம், கசரயோகங்கள் போன்ற காலகட்டத்தில் திருமணம் நடத்தக்கூடாது. இது 9வது விதி.

9. திருமணத்தின்போது குரு, சுக்கிரன் போன்ற சுப கிரகங்கள் திருமண லக்கினத்துக்கும் மணமக்களின் ஜனன ராசிக்கும் எட்டாம் வீட்டில் இடம் பெற்றிருக்கக்கூடாது என்பது 10ம் விதி.

10. திருமணநாள் மணமக்களின் சந்திராஷ்டம தினமாக இல்லாமல் இருப்பது மிகமிக முக்கியமான விதி.

11. மணமக்களின் ஜனன நட்சத்திர நாளிலும் 3, 5, 7, 12, 14, 16, 21, 23, 2வதாக வரும் நட்சத்திர தினங்களிலும் திருமணம் நடத்தக்கூடாது என்பது 12வது விதி.

12. கடைசியாக மணமக்களின் பிறந்த தேதி அல்லது கிழமைகளிலும் கல்யாணம் பண்ணக்கூடாது.

இவ்வளவு விஷயங்கள் தெரிந்து கொண்டபின் நீங்களே அனைத்து சுபகாரியங்களுக்கும் நல்ல நாள் பார்த்துவிடுவீர்கள் தானே. அவரவர் குலதெய்வத்தை மனதில் வேண்டிக்கொண்டு உங்கள் வீட்டில் உள்ள பெரியவர்களின் ஆசியுடன் நல்லதொரு நாளைக் குறியுங்கள். அனைத்துக் காரியங்களும் தடை-யின்றி இனிதே நிறைவேறிட இறைவன் அருள் பரிபூரணமாக கிடைக்கும்.

– ராதிகா.S

# வனப்பகுதியில் 'சிசிடிவி' கேமராவுடன் 835 சூரிய ஒளி விளக்கு பொருத்த முடிவு

## விலங்குகள் - மனித மோதல்களை தடுக்க நடவடிக்கை



மதுராந்தகம் வனச்சரக அலுவலகத்தின் கீழ், மதுராந்தகம், செய்யூர், உத்திரமேரூர் தாலுகாக்களில், 4,872 ஹெக்டேர் நிலப்பரப்பில், இலையுதிர் காப்பு காடுகள் உள்ளன. சமூக காடுகள் 3,000 ஹெக்டேர் பரப்பளவில் உள்ளன.

கோழியாளம், தீட்டாளம், பெருங்கோழி, காட்டுக்கூடலூர், காட்டுக்கரணை, தோட்டச்சேரி, கொளத்தனூர், எடமச்சி, ராமாபுரம், பெரும்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில், இந்த காப்புக் காடுகள் உள்ளன.

இக்காடுகளில், 2,000க்கும் அதிகமான மான்கள், 1,000க்கும்அதிகமான மயில்கள், காட்டுப்பன்றி, முயல், நரி, குள்ளநரி, உடும்பு, குரங்கு உள்ளிட்ட உயிரினங்கள் வாழ்கின்றன.

காப்புக் காடுகளை ஒட்டியுள்ள விவசாய விளை நிலங்களில், நெல், கரும்பு, வேர்க்கடலை, உளுந்து, மரவள்ளி கிழங்கு, கேழ்வரகு, பருத்தி, தர்பூசணி போன்ற பயிர்களை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர்.

தண்ணீர், உணவுத் தேவைக்காக, காப்புக் காடுகளில் இருந்து வெளியேறும் மான்கள், காட்டுப்பன்றிகள் போன்றவை, பயிர்களை நாசம் செய்கின்றன.

அதனால், பயிர்கள் அழிந்து விவசா-யிகளுக்கு பொருளாதார பாதிப்புகள் ஏற்படுகின்றன.

இதனைத் தவிர்க்கும் விதமாக, விலங்குகளிடம் இருந்து பயிர்களை காக்க, விவசாயிகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

இரவு நேரங்களில் பயிர்களை காப்பதற்காக கண் விழிப்பதால், மற்ற கூலி வேலைகளுக்கு செல்ல முடியாமல் தவிக்கின்றனர்.

மான், காட்டுப்பன்றிகளை விரட்டுவதற்காக, மின் இணைப்பு ஏற்படுத்தி, பயிர்களை சுற்றி மின்வேலி அமைப்பதனால், வேட்டைக்குச்

செல்லும் மனிதர்கள் சிக்கி, சில நேரங்களில் மனித உயிர் இழப்புகளும் ஏற்படுகின்றன.

இவ்வாறு, வனவிலங்குகள் விளைநிலங்களில் பயிரிடப்பட்டுள்ள பயிர்களை அழிக்கும் பிரச்சனை, நீண்ட காலமாக இருந்து வருகிறது.

**ஒப்பந்தம்**

இதற்கு, வனத்துறை போதிய இழப்பீட்டினை, உடனடியாக வழங்குவதில்லை என, விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

வன விலங்குகள் விளை பயிர்கள் சேதம் குறித்த பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என, மாதந்தோறும் கலெக்டர் அலுவலகத்தில் நடக்கும் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில், விவசாயிகளால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தது.

இதுகுறித்து, துறை சார்ந்த அதிகாரிகள், விவசாயிகள், சமூக அமைப்புகளிடம் இருந்து பல்வேறு கருத்துகள் பெறப்பட்டன. மேலும், வனத்துறை, வருவாய்த்துறை, போலீஸ், உள்ளாட்சி அமைப்பினர், வேளாண் துறை உள்ளடக்கிய, விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

இதில், தமிழக அரசு சார்பாக, மனிதன் – விலங்கு மோதலை தவிர்க்கும் விதமாக, தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் கீழ், சூரிய ஒளியில் ஒளிரும் விளக்குகளை நிறுவ, ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில், மதுராந்தகம் வனச்சரகத்திற்கு உட்பட்ட 835 பகுதிகளில், ‘சிசிடிவி’ கேமராக்களுடன் சூரிய ஒளியில் ஒளிரும் விளக்குகள் அமைக்க, மின் ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வனவிலங்கு – மனிதர்கள் மோதல் தடுப்பு பணிக்காக, மதுராந்தகம் இலையுதிர் காப்புக் காடுகளில், 835 இடங்களில், கண்காணிப்பு கேமராக்களுடன் சோலார் விளக்குகள் பொருத்துவதற்கான ‘டெண்டர்’ விடப்பட்டுள்ளது. ஒப்பந்தம் முடிந்தவுடன், இத்திட்டப்பணிகள் செயல்படுத்தப்படும்.

– A.தங்கராஜ்

# தமிழகத்தில் யானைகள் எண்ணிக்கை 3063 ஆக உயர்வு

தமிழகத்தில் கடந்த ஓராண்டில் யானைகள் எண்ணிக்கை, 102 அதிகரித்துள்ளது. தற்போது தமிழக வனப்பகுதியில் 3063 யானைகள் இருப்பது தெரியவந்துள்ளது.

தமிழகம், கர்நாடகா, கேரளா, ஆந்திரா எல்லையோர மாவட்டங்களில், ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு, மே 23 முதல் 25ம் தேதி வரை நடந்தது. தமிழகத்தில், 26 வனப் பிரிவுகளில் நடத்தப்பட்டது. கணக்கெடுப்பில், 1836 வனத்துறை ஊழியர்கள், 342 தன்னார்வலர்கள் என, மொத்தம் 2178 பேர் ஈடுபட்டனர். இந்த கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் வாயிலாக, தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கையையும், வாழ்வியல் முறைகளையும் அறிந்து கொள்ள உதவும்.

யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையை, முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:

யானைகள் பாதுகாப்புக்காக, தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகள் காரணமாக, யானைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தமிழகத்தில் 2023ல் 2961 ஆக இருந்த யானைகள் எண்ணிக்கை, தற்போதைய கணக்கெடுப்பு அறிக்கையின்படி, 3063 ஆக உயர்ந்துள்ளது.

அகத்திய மலை யானைகள் காப்பகம், தமிழ்நாடு யானைகள் பாதுகாப்பு இயக்கம், யானைகள் வழித்தடங்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற, அரசின் நடவடிக்கைகள், யானைகள் எண்ணிக்கை உயர்வுக்கு காரணம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. – தமிழ் வீரன்

# கஞ்சா குட்கா போன்ற குற்ற செயல்களில் ஈடுபட்டால் கடுமையான தண்டனை பாயும்

## புதியதாக பொறுப்பேற்ற மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஸ்ரேயா குப்தா

திருப்பத்தூர் மாவட்டத்திற்கு புதியதாக பொறுப்பேற்ற மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஸ்ரேயா குப்தா பத்திரிக்கை யாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கூறியதாவது:-

“திருப்பத்தூர் மாவட்டத்தில் குற்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். பெண்களுக்கு எதிரான குற்ற சம்பவங்கள் குறித்து தகுந்த விசாரணை செய்து சம்பந்தப்பட்டவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். கஞ்சா குட்கா போன்ற போதை பொருள் பயன்பாடுகள் இருக்கக்கூடிய இடங்களை கண்டறிந்து சம்பந்தப்பட்ட குற்ற செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது குண்டாஸ் சட்டம் பாயும்.

சட்ட ஒழுங்கிற்கு குந்தகம் செய்யும் நபர்கள் மீது கண்டிப்பாக காவல்துறை நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படும். சென்னை போன்ற பெரு நகரங்களில் இருந்து தற்போது திருப்பத்தூர் மாவட்டத்திற்கு புதிதாக பொறுப்பேற்ற நிலையில் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், பத்திரிகை / ஊடக நண்பர்கள் ஒத்துழைப்பு செய்ய வேண்டும்.

காவல்துறையால் மட்டும் அனைத்து குற்றங்களையும் துரிதமாக கண்டுபிடித்து விட முடியாது சரியான தகவலின் அடிப்படை-யில்தான் குற்ற சம்பவங்களை குறைக்க முடியும். பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் எந்த நேரத்திலும் தொடர்பு கொண்டு தகவல்களை அளிக்கலாம்.

போக்குவரத்து நெரிசல் குறித்த கேள்விக்கு, படிப்படியாக போக்குவரத்து சரி செய்யப்படும். மாவட்டம் முழுவதும் காவல்துறை கட்டுப்பாட்டின் கீழ் தீவிர கண்காணிப்பு ஏற்படுத்தப்படும். கஞ்சா குட்கா விற்பனையில் ஈடுபடுவோரை கண்காணிக்க சிறப்பு தனிப்படை குழு ஏற்படுத்தப்படும். பெண்களுக்கு ஏற்படும் பாலியல் கொடுமைகள், பள்ளி மற்றும் கல்லூரிக்கு செல்லும் மாணவிகளை யூடிசிங் செய்தால் கடுமையான நடவடிக்கை பாயும்.



குழந்தை திருமணம் முற்றிலும் தடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பட்டியலின மக்களுக்கு எதிராக நடைபெறும் அச்சுறுத்தல்கள், வன்புணர்வுகள், அட்ராசிட்டி போன்ற குற்ற செயல்களில் ஈடுபட்டு பட்டியலின மக்களை தாக்குவது போன்ற செயல்களில் ஈடுபட்டால் தகவலின் அடிப்படையிலும் மனுவின் நேரடி விசாரணை அடிப்படையிலும் மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் விசாரணை மூலம் வழக்கு பதியப்படும்.

காவல் நிலையங்களில் மற்றும் பொது இடங்களில் கட்டப்பஞ்சாயத்து செய்தால் அது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முக்கிய பிரதான சாலைகளில் பைக் ரேஸ் செய்து பொதுமக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தினால் வாகனத்தை கைப்பற்றுவதுடன் சம்பந்தப்பட்ட நபர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்” என தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களின் பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளித்ததோடு, பத்திரிகையாளர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

- S.மோகன்


Subzero Cool Tech
AC REPAIR SERVICE & RENT
AT YOUR DOOR STEP
AC REPAIR
INSTALLATION
MAINTENANCE
AMC SERVICE
We Repair all Brands
Uninstallation
Gas Filling
Air Duct Cleaning
HIGH QUALITY PREMIUM SERVICE
CONTACT US
Address:
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR,
Opp to Bajanai Kovil,
Chennai - 600097.
SARAVNAN
9884555002
Email: saravnan1290@gmail.com

# “ZERO ACCIDENT DAY”

# போக்குவரத்து விழிப்புணர்வு




சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை சென்னை எல்லைக் குட்பட்ட சாலைகளில் பாதுகாப் பான மற்றும் விரைவான பயணத்தை உறுதிசெய்யவும், U திருப்பங்கள். ஒரு வழிப்பாதை, புதிய வேக வரம்புகள், பள்ளி பாதுகாப்பு மண்டலங்கள் போன்ற பல்வேறு முயற்சிகளை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு முயற்சிகளை அறிமுகபடுத்யதன் காரணமாக சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையினர் தனது பகுதிகளில் விபத்துகளின் அளவை குறைத்து வருகிறது.

சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையின் செயல்முறை நோக்கமானது “ZERO IS GOOD” இதில் Zero என்பது Zero விதிமீறல், Zero சலான், Zero அபராதம் மற்றும் Zero விபத்து ஆகியவற்றைக் குறிக்கிறது. இந்தியாவிலேயே முதன்முறையாக. சாலை விபத்துகளைக் குறைக்க. வாகன ஓட்டிகளிடையே சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் பொறுப்பான வாகனம் ஓட்டும் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில். ZAD (ZERO ACCIDENT DAY) என்ற விரிவான மெகா விழிப்புணர்வு பிரச்சாரத்தை 20 நாள் சென்னை பெருநகர போக்குவரத்துக் காவல் துறை தொடங்கியுள்ளது.

இந்த விழிப்புணர்வு பிரச்சாரம் 20 நாட்களுக்கு செயல்படும் மற்றும் 26.08.2024 அன்று “ZERO ACCIDENT DAY” ஆக அனுசரிக்கப்படும். இந்த பிரச்சாரத்தின் ஒவ்வொரு நாளும்




குறிப்பிட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் அணுகுமுறைகளும் அர்ப்பணிக்கப்படும். சென்னை பெருநகரில் சாலைப் பாதுகாப்பின் முக்கியத்துவம். போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிப்பது மற்றும் அனைத்துப் பயணிகளுக்கும் பாதுகாப்பான சாலைகளை உறுதி செய்வதற்கான கூட்டுப் பொறுப்பு ஆகியவற்றைப் பற்றி பொதுமக்களுக்குக் கற்பிப்பதும், அந்த நாளை “விபத்து இல்லாத நாளாக மாற்றுவதற்கு அனைத்து வாகன ஓட்டிகளும் மற்றும் சாலைப் பயணிகளும் பொறுப்பாலர்களாகும்“ என்பதை வாகன ஓட்டிகளுக்கு உணர்த்துவதே இந்தத் திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும்.

இந்த ZAD (ZERO ACCIDENT DAY), 06.08.2024. அன்று திரு.ஆர்.சுதாகர். இ.கா.ப. கூடுதல் காவல்துறை ஆணையாளர், போக்குவரத்து. சென்னை பெருநகர போக்குவரத்து காவல் அவர்களால் பல்லவன் பேருந்து பணிமனையில் தொடங்கி வைக்கப்பட்டது. இதில் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், IAS, MD. MTC அவர்கள் சிறப்புரையையும், திரு.ஆர்.சுதாகர், இ.கா.ப.. கூடுதல் காவல் ஆணையாளர். போக்குவரத்து, பெருநகர சென்னை காவல்துறை அவர்களால் ZAD லோகோ வெளியீடு மற்றும் தொடக்க உரையையும் நிகழ்த்தினார்கள். மொத்தம் 12 முக்கிய பங்குதாரர்கள் சாலைப் பயனாளர்களாக அடையாளம் காணப்பட்டு, சாலையில் வாகனம் ஓட்டும்போது நடத்தையை மேம்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் தொடங்கப்பட்டுள்ளன. பள்ளி நிர்வாகம், போக்குவரத்துறை. IT நிறுவன ஊழியர்கள். கல்லூரிகள், ஆட்டோ/கேப் ஓட்டுநர்கள், E-காமர்ஸ் ஊழியர்கள், மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் குடியிருப்பு சங்கங்கள் முக்கிய பங்குதாரர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த ZAD (ZERO ACCIDENT DAY) நிகழ்ச்சியில் டாக்டர். வெங்கடேஷ் பாலசுப்ரமணியன், பேராசிரியர், ஐஐடி மெட்ராஸ். டாக்டர். தவபழனி அழகப்பன் அவசரநிலை HOD அப்பல்லோ மருத்துவமனை. சென்னை. டாக்டர். அருண் கண்ணன் எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் அப்பல்லோ மருத்துவமனை, சென்னை ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துணை ஆணையாளர்கள் திரு.பண்டி கங்காதர், இ.கா.ப. காவல்துறை துணை ஆணையாளர் போக்குவரத்து, தெற்கு மாவட்டம், திரு. வி.பாஸ்கரன், காவல்துறை துணை ஆணையாளர் போக்குவரத்து, கிழக்கு மாவட்டம், மற்றும் திரு.குமார், துணை ஆணையாளர் போக்குவரத்து, வடக்கு மாவட்டம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

– பா.கார்த்திகேயன்




# அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 62ஆக உயர்த்த முடிவு!

# டிடிவி.தினகரன் கருத்து!

தமிழக அரசுக்கு ஏற்பட்டிருக்கும் நிதி நெருக்கடியை சமாளிப்பதற்காக அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதை 60லிருந்து 62 ஆக உயர்த்துவது தொடர்பாக தமிழக அரசு பரிசீலனை செய்துவருவதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன என டிடிவி.தினகரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தளத்தில்: தமிழக அரசுத்துறைகளில் பணியாற்றும் ஊழியர்களில் சுமார் 40 சதவிகிதம் பேர் அடுத்தடுத்த ஆண்டுகளில் ஓய்வுபெறவிருக்கும் நிலையில், அவர்களுக்கான பணப்பலன்களை வழங்குவதற்கான நிதி இல்லாத காரணத்தை சுட்டிக்காட்டி திமுக அரசு இம்முடிவை எடுத்திருப்பதாக அரசு ஊழியர் சங்கங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

அரசு ஊழியர்களுக்கு மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தப்படும், அரசுத்துறைகளில் உள்ள 3.5 லட்சம் காலிப்பணியிடங்கள் தமிழக இளைஞர்களால் நிரப்பப்படும் என்ற வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த திமுக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்தின் தலைவரைக் கூட இன்று வரை நியமிக்க முடியாத சூழலில்தான் தள்ளாடிக் கொண்டிருப்பதை மக்கள் அனைவரும் நன்கறிவர்.

தமிழக அரசின் பல்வேறு துறைகளில் நிலவும் லட்சக்கணக்கான காலிப்பணியிடங்களை நிரப்ப முன்வராத திமுக அரசால், வேலையில்லாத இளைஞர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதோடு, அரசுப் பணியை எதிர்நோக்கி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போரின் எண்ணிக்கையும் சுமார் 80 லட்சத்தை கடந்திருக்கிறது.

இந்த நிலையில் அரசு ஊழியர்களுக்கான ஓய்வுபெறும் வயதை மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டிப்பதால், ஏற்கனவே அரசுப் பணியில் இருப்பவர்களுக்கான பதவி உயர்வு பாதிக்கப்படுவதோடு, அரசுப் பணி கனவில் காத்திருக்கும் லட்சக்கணக்கான இளைஞர்களின் எதிர்காலமும் அடியோடு சீர்குலையும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழக இளைஞர்களின் வேலைவாய்ப்பை பறிக்கும் இம்முடிவை உடனடியாக கைவிடுவதோடு, தமிழக அரசுத்துறைகளில் நிலவும் லட்சக்கணக்கான காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துகிறேன் என தெரிவித்துள்ளார்.

-தி.பாமா

# நாட்றம்பள்ளி அருகே நிலவும் செயற்கையான குடிநீர் தட்டுப்பாடு!

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அடுத்த மல்லகுண்டா ஊராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக இருமுனை மற்றும் மும்முனை மின்சாரம் சப்ளை இருந்தாலும் ஆழ்துளை கிணறுகளை இயக்கும் அளவிலான மின் சப்ளை இல்லாமல் இருப்பதால் கடந்த பல நாட்களாக இப்பகுதியில் வசிக்கும் மக்கள் விவசாயத்தை விடுத்து குடிநீருக்கே அல்லல் படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பேசும்போது நிலைமை கூடிய விரைவில் சரியாகும் என்று கூறினர். ஆனால் நிலைமை சரியாவது என்று என்பதை உறுதியாக கூற இயலவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் காசு கொடுத்து நீர் வாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர். இவ்வளவு மழை பெய்தும்



முறையான மின்சப்ளை இல்லாததால் இப்பகுதியில் செயற்கையான குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருவது இப்பகுதி மக்களை வேதனை அடையச் செய்துள்ளது. சம்பந்தப்பட்ட ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரிகள் இதற்கு முற்றுப்புள்ளி வைப்பார்களா?

- S.மோகன்


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | **₹ 240/-** |

Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: penakural@yahoo.com

UPI Number:
8754582123


# இந்தியவின் மின்னணுப் புரட்சி

உலக அளவில் இணையம் எனும் வலைப்பின்னல் விரியத் தொடங்கியபோதே இந்தியா அதில் இணைந்துகொண்டது. அதன் பயனைத்தான் நாம் இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்.

டிஜிட்டல் உலக வரைபடத்தில் இந்தியாவுக்கு உரிய இடம் இருக்கிறது; இணையப் பயனாளிகளைப் பொறுத்தவரை இந்தியா முக்கியச் சந்தையாக உருவெடுத்திருக்கிறது. ஃபேஸ்புக், கூகுள், ஆப்பிள், அமேசான் எனப் பன்னாட்டுத் தொழில்நுட்ப ஜாம்பவான்கள் இந்தியாவைத் தங்கள் வளர்ச்சித் திட்டத்தில் பிரதானமாகக் கருதுகின்றன. இவற்றுக்கெல்லாம் அடிப்படை, இந்தியாவும் இந்தியர்களும் இணைய வசதியைத் திறம்படப் பெற்றிருப்பதுதான். இணைய விநியோகத்தில் இன்னமும் போதாமைகள் இருக்கின்றன என்றாலும், நாடு தழுவிய அளவில் இணைய வசதியும் கைபேசி சேவையும் சாத்தியமாகி-யிருப்பது, நவீன இந்தியாவின் வளர்ச்சிக்கான பின்புலமாக இருப்பதை மறுப்பதற்கில்லை. ஒப்பீட்டளவில், இணையக் கட்டணமும் கைக்கு எட்டக்கூடியதாகவே இருக்கிறது.

விரல்நுனியில் பணப் பரிவர்த்தனையைச் சாத்தியமாக்கும் டிஜிட்டல் இந்தியாவாகத் தேசம் உருவாகியிருப்பதற்கும் இணையமே காரணம். 75ஆவது சுதந்திர தினத்தை நாடு கோலாகலமாகக் கொண்டாடும் தருணத்தில், 1995இல் சுதந்திர தினத்தன்றுதான் இந்தியாவில் இணையம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்தது என்பதையும் நினைவில் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

1995இல்தான் இணையம் வர்த்தகமயமான ஆண்டு. அதே ஆண்டுதான் இணையத்தை எல்லோரும் அணுகுவதைச் சாத்தியமாக்கிய வைய விரிவு வலையும் (World Wide Web) பொதுப் பயன்பாட்டிற்கு வந்தது. அதைத் தொடர்ந்து, இரண்டே ஆண்டுகளில் இந்தியாவில் இணையம் அறிமுகமாகிவிட்டது. அதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்பே, ‘எர்நெட்’ எனப்படும் கல்வி ஆய்வு வலைப்பின்னல் (Educational Research Network (ERNET)) மூலம் இணையம் எனும் வலைப்பின்னலில் இந்தியா இணைந்திருந்தது.



1969 இல் அமெரிக்காவில் அர்பாநெட்டாக உதயமான இணையம், அதன் தொழில்நுட்பக் கட்டமைப்பை உருவாக்கிக்கொண்டிருந்த ஆரம்பக் காலகட்டத்தில் பெரும்பாலும் ஆய்வு அமைப்புகளாலும் கல்வி நிறுவனங்களாலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டுவந்தது.

இந்தச் சூழலில், இந்தியாவும் இந்த வலைப்பின்னலில் இணைந்ததை இப்போதும் வியப்பாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. இந்தக் கல்வி வலைப்பின்னல் இந்தியாவில் உருவாகக் காரணமான ஸ்ரீனிவாசன் ரமணி, இந்திய இணைய முன்னோடிகளில் ஒருவராகக் கொண்டாடப்படுகிறார். இந்தப் பங்களிப்பிற்காக அவர் இணையப் புகழரங்கிலும் இடம்பெற்றிருக்கிறார்.

கிரிக்கெட்டில் இந்தியா உலகக் கோப்பையை வென்ற 1983இல்தான் ஸ்ரீனிவாசன் ரமணி, இந்தியக் கல்வியியல் வலைப்பின்னலுக்கான யோசனையை முன்வைத்தார். இதுவே எர்நெட்டுக்கான அடிப்படை. பொறியியல் பட்டதாரியான ரமணி அமெரிக்கா சென்று பணியாற்றிய பிறகு, 1973 இல் இந்தியா திரும்பினார்.

அமெரிக்காவில் மின்னஞ்சல் பயன்பாடு உள்ளிட்டவற்றைப் பார்த்து, அவற்றின் பின்னே இருந்த கணினி வலைப்பின்னலால் ஈர்க்கப்பட்டவர். நாடு திரும்பியதும், மென்பொருள் வளர்ச்சி, கணினி-யியல் நுட்பங்கள் மையத்தின் உருவாக்கத்தில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றார்.

இந்தியாவில் உருவாக்கப்பட்ட கணினிக்கான தகவல்தொடர்பு மென்பொருளை உருவாக்கிய குழுவுக்குத் தலைமை வகித்த ரமணி, 1981இல் மூன்று நகரங்களைச் செயற்கைக்கோள் வாயிலாக இணையத்தின் அடிநாதமான 'பாக்கெட் ஸ்விட்ச்' முறையில் இணைத்தார். இவற்றின் தொடர்ச்சியாக எர்நெட் அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக இதன் மைய மின்னஞ்சல் ஸ்விட்ச், சர்வதேச கேட்வே ஆகியவற்றை அமைத்துக்கொடுத்தார். இந்தியாவிலிருந்து சர்வதேச வலைப்பின்னலுக்கான முதல் தொடர்பாக இது அமைந்தது.

ரமணி இந்தச் சாதனையை நிகழ்த்துவதற்கான அடிப்படையை, இந்தியாவின் முதல் கணினியை உருவாக்கிய கணினி விஞ்ஞானி ரங்கசாமி நரசிம்மன் உள்ளிட்டோர் அமைத்திருந்தனர்.

கல்வி நிறுவனங்களில் ஆய்வுப் பணிகளுக்காகவும், தகவல் பரிமாற்றத்திற்காகவும் இணையமும், மின்னஞ்சலும் இந்தியாவில் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், மக்களுக்கு இந்தச் சேவையை அறிமுகப்படுத்தியதில் அப்போது வி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் தலைவராகப் பொறுப்பில் இருந்த பி.கே.சிங்கால் முக்கியப் பங்காற்றியிருக்கிறார். 1995இல் இணைய வசதி இந்தியாவுக்கு வந்தது இரண்டாவது சுதந்திர தினம் என வர்ணிக்கப்பட்டது.

**இந்திய இணையத்தின் தந்தை**

இந்திய மக்களுக்கு இணைய வசதி தேவை என்பதை உணர்ந்து, இது தொடர்பாக வாதிட்டு, அரசைச் சம்மதிக்க வைத்தது மட்டுமல்லாமல், அறிமுகத்தின்போது இந்திய இணைய வசதியில் ஏற்பட்ட குளறுபடிகளுக்கெல்லாம் பொறுப்பேற்று, தனிக் குழு அமைத்து, அடுத்த பத்து வாரங்களில் இவற்றைச் சரிசெய்த செயல்வீரராகவும் சிங்கால் அறியப்படுகிறார்.

அப்போது ஆபாசத் தளங்களைப் பார்வையிடும் வசதியைச் சுட்டிக்காட்டி, மக்கள் பிரதிநிதிகள் சிலர் இத்தகைய ஆபத்தான வலையை இந்தியாவுக்குக் கொண்டுவந்தது அவசியமா எனக் கேள்வி எழுப்பியபோது, இந்தியாவுக்கு இணையத்தை அளிப்பதுதான் என் வேலை என்றும் அதைப் பொறுப்பாகப் பயன்படுத்த வைப்பதில்லை என்றும் தெளிவாகப் பதிலளித்திருக்கிறார்.

3% மக்கள் ஆபாசத் தளங்களைப் பார்ப்பதில் எனக்கு அக்கறை இல்லை, எஞ்சிய 97% பேர் என்ன செய்கின்றனர் என்பதே முக்கியம் என்றும் கூறி இணையப் பயன்பாட்டைப் புரியவைத்திருக்கிறார்.

இணையத்தைப் பொதுப் பயன்பாட்டின் பொருட்டு அறிமுகம் செய்ததற்காக சிங்கால் 'இந்திய இணையத்தின் தந்தை' எனப் போற்றப்படுகிறார். மறைந்த பாலிவுட் நடிகர் ஷம்மி கபூரையும், அவரது இணைய நண்பர்களையும் நினைத்துப்பார்ப்பது இந்த இடத்தில் பொருத்தமாக இருக்கும்.

ஷம்மி கபூர் கணினித் தொழில்நுட்பத்தில் ஆர்வம் கொண்டவராக இருந்ததோடு, இந்தியாவுக்கு அதிகாரபூர்வமாக இணையத்தைக் கொண்டுவருவதற்கு முன்பாகவே தொலைபேசியின் உதவியோடு ஆப்பிள் வேர்ல்டு சேவை மூலம் இணையத்தைப் பயன்படுத்தியிருந்தார். ஷம்மியும் அவரது நண்பர்களும் இணையத்தைப் பயன்படுத்துவதை ஒரு சந்திப்பில் தற்செயலாகத் தெரிந்தகொண்ட நிலையிலேயே சிங்கால் இது எப்படிச் சாத்தியம் எனக் குழம்பினாலும், இந்தியாவுக்கு இணைய வசதி தேவை என்பதையும் அந்நிகழ்ச்சி உணர்த்தியது.

பின்னர், கபூரும் நண்பர்களும் அவரை நேரில் சந்தித்து இது பற்றி வலியுறுத்தியிருக்கின்றனர். அந்தக் காலகட்டத்திலேயே ஷம்மி கபூர், 'ஜங்லி' எனும் சொந்த இணையதளத்தையும் வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் இணையம் அறிமுகமான அடுத்த ஆண்டு, இந்தியரான சபீர் பாட்டியா அமெரிக்காவில் ஹாட்மெயில் சேவையை அறிமுகப்படுத்தி உலகையே திரும்பிப் பார்க்க வைத்தார். மின்னஞ்சல் சேவையை எல்லோரும் எளிதாக அணுக வழிசெய்த வலைமெயிலான ஹாட்மெயில் வெற்றிக் கதை ஒருவிதத்தில் இந்திய ஸ்டார்ட்-அப் கதைக்கான ஊக்கம் என்றும் சொல்லலாம்.

- பா.சரவணன்

# நக்சலைட்களால் உயிரிழந்த 4 காவலர்களுக்கு 44ஆம் ஆண்டு வீரவணக்கம் நாள்

## 30 குண்டுகள் முழுங்க நினைவு அஞ்சலி அனுசரிக்கப்பட்டது





திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த ஜோலார்பேட்டையில் நக்சலைட் சிவலிங்கம் என்பவரை பிடித்து ஜீப்பில் அவரை அழைத்து சென்ற போது

திருப்பத்தூர் அருகே சேலம் பிரதான சாலையில் சிவலிங்கம் மறைத்து வைத்திருந்த நாட்டு வெடிகுண்டை வெடிக்க செய்ததில் ஜீப்பில் இருந்த காவல் ஆய்வாளர் பழனிச்சாமி, தலைமை காவலர் ஆதிகேசவேலு, காவலர்கள் யேசுதாஸ் மற்றும் முருகேசன் ஆகியோர் சம்பவ இடத்திலே உயிரிழந்தனர்.

இந்த நிலையில் ஆண்டு தோறும் திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் வீரமரணம் அடைந்த 4 காவல் துறையினருக்கு திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் கட்டப்பட்டுள்ள மணிமண்டபத்தில் வீரவணக்கம் நாள் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் இன்று வீரமரணம் அடைந்த 4 காவல்துறை அதிகாரிகளுக்கு 44ஆம் ஆண்டு வீரவணக்கம் நாள் 30 குண்டுகள் முழுங்க இன்று அனுசரிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஓய்வு பெற்ற காவல் துறை இயக்குனர் தேவாரம் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

முன்னாள் காவல் துறை தலைவர் துக்கையான்டி மற்றும் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் தர்ப்பகராஜ், திருப்பத்தூர் மாவட்ட கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் மற்றும் காவல்துறை அதிகாரிகள் கலந்து கொண்டு நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்

அதனைத் தொடர்ந்து ஜோலார்பேட்டை

சட்டமன்ற உறுப்பினர் தேவராஜ், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி, உயிரிழந்த காவலர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில் காவல் துறை சார்ந்த அதிகாரிகள் கட்சிப் பிரமுகர்கள் மற்றும் அரசுத் துறை சார்ந்த அதிகாரிகள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர். - S.மோகன்



தீப்ஷிகா
ஆட்டோ ஒர்க்ஸ்
அனைத்து இருசக்கர வாகனங்களும் சரிபார்க்கப்படும்
All kind of bike service and care
Engine Re - work
High Quality
Engine Oil
Refill and Maintance
100 % Genuine Parts
used for your bike
Air Filling
Tyre Puncher
Tube & Tube less
Respect Service
PRICE
QUALITY
SERVICE
Deepshika Auto Works
# 3/896, Pillaiyar Kovil Street, Mettukuppam, Chennai - 600097.
9884166636, 7010399368

**PENA KURAL,** Tamil Monthly - August 2024
Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR**

Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.**

Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.**

Editor: **RATHIKA S**

